இலவச வெளியீடு யாழ்ப்பாணம்: Free Circulation
2012
ஆடி, ஆவணி, புரட்டாதி

# Vettimaniy
# வெற்றிமணி

மணி -62
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
இணை ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் M.A (Dist)
ஓசை 19

Orient Textiles & Jewellery

மாணவர் கல்வி சிறக்க எமது வாழ்த்துக்கள்
Konigswall16(AmHBF)
44137 Dormund
Germany
Tel: 0231-162377



## ஜேர்மனியரையே அதிரவைத்த தமிழ்ச் சகோதரர்களின் சாதனை!



தாய்மண்ணில் மணிவிழா...



கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனை!

PUBLIC LIBRARY JAFFNA





சாதனையாளர் அரங்கில்...






U.K.- Canada-France-Singapore-India-Sri-lanka
Ayngaran International
மாணவர்களின் கல்வி சிறக்க என்றும் எங்கள் வாழ்த்துக்கள்
30, High Street, Collierswood, London SW19 2AB,UNITED KINGDOM


மாணவர் மனங்களில் ஒளிர்ட்டும் வெற்றிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிமணி



ஸ்தாபகர்
**அமரர் மு. க. சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர் :
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
மகா வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
**கலாநிதி**
**மு. க. சு. சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
*Dr.M.K.S.Sivakumaran B.F.A.*
Germany

இணையாசிரியர்
**திருமதி**
**வலன்ரீனா இளங்கோவன்**
(B.A.Hons), Dip.in.Edu., M.A. (Dist.)

Associate Editor
**Mrs. Valanteena Elangkovan,**
(B.A.Hons), Dip.in.Edu, M.A. (Dist)
Jaffna.

கௌரவ ஆலோசகர்
**கலாநிதி மனோன்மணி**
**சண்முகதாஸ்**

தொடர்புகளுக்கு :
**வெற்றிமணி**
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
தொ.பே. : 0771141493

T.P. : 0776686462
E-mail : vettimaniy@gmail.com

**மக்கள் தொடர்பு**
**திரு. சு. இளங்கோவன்** B.A.,
Dpi.in.S.Sc, Dip.in.F.Sc, Dip.in.S.B.M., Spl Trd.
**(யாழ்ப்பாணம்)**

**திருமதி சாந்தகௌரி ரவிநந்தா**
(Spl. Trid)
**(நாவலப்பிட்டி, மலையகம்)**

Dr. **கதிர்துரைசிங்கம்** (R.M.O)
**(கனடா)**

**திரு. சஞ்சீவன் சிவகுமாரன்**
(B.Sc.Eng.)
**(இங்கிலாந்து)**


**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச் செல்கிறது.

**அரவிந்தர்**



## இனிய வாசகர்களுக்கு!

வெற்றிமணியின் இனிய வாழ்த்துக்கள். அடுத்து வரும் வெற்றிமணி பத்திரிகைக்கு கட்டுரைகள், கவிதைகள், கதைகளை மாணவரிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் வரவேற்கின்றோம். அத்தோடு தேசிய, மாகாண, மாவட்ட மட்டப்போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களது புகைப்படங்கள், விபரங்களையும் அனுப்பி உதவும்படி கேட்டுக் கொள்கின்றோம். வெற்றிமணியை உங்களது நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

**திருமதி. வலன்ரீனா இளங்கோவன்**
இணை ஆசிரியர், வெற்றிமணி.

**மணிவிழா நாயகன் வெற்றிமணியின் பிரதம ஆசிரியரை பல்லாண்டு வாழ்கவென வாழ்த்து கின்றோம்.**



# 8.7.2012இல் மணிவிழாக் காணும் நலன்கள் மிக்க பெருந்தகையாளர்!

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

எனும் வள்ளுவன் வாக்கிற்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர் தான் மணிவிழா நாயகன் திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்கள். குரும்பசிட்டி மண் செய்த தவப்பயனால் திரு.மு.க.சுப்பிரமணியம் அவர்களின் அருந்தவப் புதல்வனாக 1952.7.8ந் திகதி சிவகுமாரன் பிறந்தார். தந்தையார் அதிபராக இருந்த பொன். பரமானந்தர் வித்தியாசாலையில் 1959 முதல் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். 1963ல் யா/மகாஜனக் கல்லூரியில் தனது உயர் கல்வியைக் கற்றார். கல்வி கற்கும் காலத்திலே சகல துறையிலும் விற்பன்னராகத் திகழ்ந்தார். 1971ல் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் உயர்கல்வியைச் சிறப்பாக சிறப்பத்துறையில் சிறந்து **B.F.A** பட்டதாரியாகினார். இவருக்குப் பின் எந்தத் தமிழ் மாணவரும சிறப்பத்துறையில் இதுவரை பட்டம் பெறவில்லை என்பது இவரது தனித்துவ சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது.

1977ல் இல்லறத்தில் துணையாக சொந்த மைத்துனி ஜெயபவானியை இணைத்துக்கொண்ட திரு.சு.சிவகுமாரன் அவர்கள் சிவஜெனனி, சஞ்ஜீவன் எனும் இரு பிள்ளைகளுக்குத் தந்தையுமாகினார். 1980இல் பண்டாரவளை சென் தோமஸ் கல்லூரியில் ஆசிரியராகினார். அரச கொடுமைகள் கொஞ்சங் கொஞ்சமாக அதிகரிக்கத் தொடங்கிய வேளை 1980 களிலே தந்தையாரின் இழப்பும் துயரத்தில் ஆழ்த்தியபோதும் மனந்தளராது தாயார் அனுமதியுடன் 1981இல் பிறந்த நாட்டை விட்டு ஜேர்மனிக்குச் சென்றார். அங்கும் தம் திறமைகளை வெளிக்கொணர்ந்து பாராட்டு, பரிசில்களைப் பெற்றார். பலருக்கு சிற்பச் சின்னங்களை வடிவமைத்து வழங்கினார்.

இவர் தம் பத்திரிகைச் சேவை அளப்பரியதொன்றாகும். இதற்கு இவரது வெளியீடான வெற்றிமணிப் பத்திரிகையே சான்று பகர்கின்றது. சிறியோர் முதல் பெரியோர் வரை யாவருக்கும் பயன்படும் வகையில் இவர் பத்திரிகை அமைந்திருப்பது பாராட்டக்குரியதாகும். இலக்கிய உலகின் கண் எழுத்தாற்றல், திறன் கொண்டு விளங்கும் கண்ணன் அவர்கள் எதை எழுதாது விடவில்லை. பத்திரிகைத்துறை, சிறுகதை ஆக்கம், கவிதை புனைதல், நாடகம் எழுதுதல் என பல்துறை நாயகனாக விளங்குகின்றார். பிறந்தோம், வளர்ந்தோம், மடிந்தோம் என்றில்லாமல் சாதனைகள் பல படைத்தவர் தான் மணி விழா நாயகன் கண்ணன் அவர்கள்.

தற்திறமை, தாராள சிந்தனை மிக்கவராக, அமைதியான சுபாவம் கொண்டவராக அன்பு, அறிவு, அடக்கம், மனித நேயம், பிறர்க்கு உதவும் மனப்பாங்கு போன்ற இன்னோரன்ன பல மனித விழுமியங்களைத் தம்மகத்தே கொண்டவர்.
"பண்புடைய பண்டுண்டுலகம் அது இன்றேல்
மாண்புக்கு மாய்வது மன்"

எனும் பொய்யாமொழிக்கு இலக்கணமாய் திகழ்பவர். உள்ளத்தால் நிறைந்த உத்தமராக விளங்குபவர் தான் மணிவிழா நாயகன் திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்கள். அறிவுத் திறனும், ஆளுமையும் மிக்க இவர் சமூகப்பணிகளிலும் சளைத்தவரல்ல. ஆர்ப்பாட்டமில்லா ஒரு ஆசிரியராகவும் சிறந்த பண்பாளனாகவும் நல்லுறவைப் பேணும் பெருந்தகையாளனும் இவரே எனில் அது மிகையாகாது.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க மண்ணை நேசித்தவர். அதனாலேயே தநதையார் ஆரம்பித்த "வெற்றிமணி"யைத் தான் பிறநாடு சென்று (ஜேர்மனி) வசித்த போதும் கைவிடாது தொடர்ந்து உலகளாவிய ரீதியில் வெற்றிமணி வெற்றிநடைபோட்டு வலாவர வழியமைத்து, செயற்பட வைத்தவர்தான் மணிவிழா நாயகன். அவர் தம் அளப்பரிய சேவைகளை வார்த்தைகளாலோ அன்றில் எழுத்துக்களினாலோ வடித்துவிடமுடியாது.

மணி விழா நாயகனே
வாழ்க நீ வளர்க நின்பணி
இன்று போல் என்றென்றும்
வாழ்க பல்லாண்டு
குடும்பமும் இனிதே சிறந்து
குவலயமும் இன்பமாய் வாழ்ந்திடுமே.

**திருமதி ரதி சந்திரநாதன்**
*(பகுதித் தலைவர்),*
*யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.*

# இனிது வாழ்க



**பேரீழ சேகரிப் பொன்னையர் பிறந்த
ஊரான குரும்பையூர் உயர்சுப்பிர மணியம்
சீரான நவநிதிய மனைவிபாற் பெற்
தேர்ஊரும் சிவகுமாரத் திருவாளர் வாழ்க!**

**விரிவான விஞ்ஞான கல்விமேல் என்னும்
புரிமாறி பல்கலைக்கழகம் புகுந்தே
உரமாக முதன் முதல் ஓவியம் கற்றுத்
தரமான பட்டத்தைப் பெற்ற கலைத்தமிழன்!**

**பற்றுமிகு தந்தையார் பள்ளிபயில் சிறுவர்க்[கு]
உற்றதுணையாகவே உபகரித்து வந்த
வெற்றிமணி இதழுக்கு ளெியாடுகளிலே
மற்றுமொரு வாழ்வளித்த கொற்றமகன் வாழ்க!**

**கல்லாலும் மண்ணாலும் கதை சொல்லும் கலைஞன்
உல்லாச நிறங்களால் உருவாக்கும் வினைஞன்
சொல்லும் பொருளோடும் உறவாடும் சுவைஞன்
வள்ளலால் போற்றுகலை மகன் சிவகுமாரன்.**

**பன்னிரண்டாயிரம் பாட்டுக்களிற் கம்பன் மிகவே
பின்னிய நல் இராமனின் பேரான கதையை
சின்னவொரு கோட்டினால் காட்டிடவல்ல
மன்னவன் ஓவியக்கலைவேள் கைமாட்சி வாழ்க!**

**அன்பதனை ஆர்வத்துடனே கடைந்து அமுதம் எடுப்பான்
பண்பெனும் நல்மகரந்தப் பசையில் தேன்வடிப்பான்
துன்பமதைத தூளாக்கி இன்பத்தில் கரைப்பான்
இன்பநலக் கலைப்பேச்சு எங்கணும் உரைப்பான்!**

**வாழியபல் கலைச்செல்வர் சிவகுமாரன் வண்ணம்
வாழியவே கலையார்வ மனைவிமக்கள் திண்ணம்
வாழியவே தமிழ்மக்கள் போற்றும் ஈழம்
வாழியவே உலகெங்கும் 'வெற்றிமணி' வாழ்க!**

***கவிஞர் வி. கந்தவனம்***

விடா முயற்சியே வெற்றிக்கு வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மனியரையே அதிர வைத்த தமிழ்ச் சகோதரர்களின் சாதனை!

கடந்த பங்குனி மாதம் யேர்மனியில் ஈழத் தமிழ்ச் சகோதரர்கள் அறிவியல் சாதனை படைத்து யேர்மனியரையே அதிரவைத்தனர்! யேர்மனியில் ஹுனுகு தொலைக்காட்சி நடத்தும் Rett die million நிகழ்ச்சியில் கலந்துகொண்ட செல்வி யோஸலின் செல்வரத்தினம், ஸ்ரெபான் செல்வ ரத்தினம் சகோதரர்கள். கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சிறப்பாகப் பதிலளித்து, இதுவரை அப்போட்டியில் எவரும் வெல்லாத அளவு பணத்தினை வென்றுள்ளனர்.

பணத்தின் பெறுமதியை விட அவர்கள் தமிழர்களின் அறிவுக்கு, பெற்றுத்தந்த வெகுமதியை மேலானதாகக் கருதி மகிழ்கின்றோம்.

ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சியை தொலைக் காட்சியில் விடாமல் பார்த்துவந்த இச்சகோதரர்கள், அந்நிகழ்ச்சியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு உடனுக்குடன் விடைகளைக் கண்டுபிடித்து மகிழ்வார்கள்.

எம்மால் விடை சொல்ல முடியும் என்றால், ஏன் இந்த நிகழ்ச்சியில் நாமும் கலந்து கொள்ளக்கூடாது என்று அவர்கள் மனதில் கேள்வி எழுந்தது. உடன் ZDF நடத்தும் Rett die million பொறுப்பாளருக்கு கடிதம் எழுதிப்போட்டார்கள்.

அவர்களும் இவர்களை நேர்காணவேண்டும் என்று அழைத்தார்கள். ஒரு சிறிய ஸ்ரூடியோவில் காகிதக் காசுகளுடன் (போலிக்காசு) ஒத்திகை பார்க்கப்பட்டது. அப்போது எல்லாம் அவர்கள் எதிர்பார்க்கவில்லை தங்களைத் தெரிவு செய்வார்கள் என்று. ஆனால் அவர்களுள் ஒளிந்திருந்த அறிவைக் கண்டு அவர்களைத் தெரிவு செய்து நிகழ்ச்சியை நடத்தினர்.

நிகழ்ச்சிக்கு சேலையுடன் வந்த செல்வி யோஸலின் செல்வரத்தினம் (சட்டத்தரணி) கம்பீரமாக வந்த சகோதரர் ஸ்ராபான் செல்வரத்தினமும் (வைத்தியக் கலாநிதி) பார்வையாளர்களை உடன் தம்வசப்படுத்தி விட்டார்கள்.



உண்மையில் யேர்மனியர் மத்தியில் சேலையுடனும், பொட்டுடனும் போகத் தயங்கும் நம்மவர் மத்தியில், செல்வி யோஸலின் செல்வரத்தினம், சேலையுடனும் பொட்டுடனும் வந்து அதிக மதிப்பெண்களை எம்மிடமும் பெற்றுவிட்டார்.

ஒவ்வொரு கேள்விக்கும் அவர்கள் விடை காணச் சிந்தித்த கோணங்கள் யேர்மனியரையே வியப்பில் ஆழ்த்தியது. ஒரு கட்டத்தில் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வி – எந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் அல்யீரியா (Aliger) பல்கலைக்கழகத்தில் உதைபந்தாட்ட அணியில் கோல் கீப்பராக இருந்தவர். அவர்கள் கொடுத்த தரவுகள் இவை : இவற்றில் எது சரியானது?

1. Sartre (எழுத்தாளர்) 2. Chirac (முன்னாள் பிரதமர் – பிரான்ஸ்) 3. Camus (எழுத்தாளர்) 4.Beccaud (பாடகர்) கிட்டத்தட்ட 1920களில் நடந்த சம்பவம்.

இந்தக் கேள்விக்கு சரியான விடையாக Camus (எழுத்தாளர்) என்று சொன்னார்கள். அதற்கு காரணம் அந்த எழுத்தாளர் அல்யீரியாவில் இருந்து பிரான்ஸ் நாட்டுக்கு வந்தனர். எனவே அவர்தான் அங்கு பல்கலைக் கழகத்தில் அன்று விளையாட்டு வீரராக இருந்திருக்கச் சந்தர்ப்பம் உண்டு எனத் தெரிவு செய்தார்கள்.

இந்த விடையைச் சொன்னதும் போட்டி நடத்துபவர் அசந்து போனார். இக் கேள்விக்கு விடையை எவரும் இவ்வளவு சுலபமாகக் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்று பாராட்டினார். இப்போட்டியில் கலந்து சாதனை படைத்தவர்களின் சொந்த ஊர் தாயகத்தில் நெடுந்தீவாகும்.

மேலும் இப் போட்டியின் போது கமரா பிடித்த காட்சிகளைப் பார்த்தவர்களுக்கு புரியும். என்ன மாதிரி ஒரு நிகழ்ச்சியைக் காட்சிப்படுத்துகின்றார்கள் என்று.

ஒன்று : கேள்விக்கு விடை அளித்துவிட்டு அது சரியோ எனக் காத்திருக்கும் போ, தம்மையும் அறியாமல் அக்கா தம்பியின் கைகளை இறுகப்பிடித்துக்கொண்டு நிற்பதும், விடை சரி என்றதும் அந்த இறுகிய விரல்கள் அப்படியே சட்டென்று விரிந்து மலர்வதும் அப்பப்பா அது ஒரு அற்புதமான படப்பிடிப்பு.

நம்மவர்கள் திருமணத்திற்கு படம் எடுத்தால் அங்கு ஒரே கிறபிக் காட்சிகள். சங்கருக்கு போட்டியாக நிற்பார்களே தவிர சங்கதிசொல்ல எண்ணமில்லை. ஒரு நிகழ்ச்சியை எப்படிப் படமாக்குவது என்பது பற்றியும், இந்தப் போட்டிகளைப் பார்த்து கற்றுக்கொள்ளலாம்.




வெற்றி! வெற்றி!! வெற்றி!!!


மொத்தத்தில் இந்த தமிழ்ச் சகோதரர்களுக்கு கிடைத்த செல்வத்தை, தமிழ்ச்செல்வங்களாக எண்ணி மகிழ்வோம். அன்று சட்டத்தரணியாக வரும்போதும் வாழ்த்தியது வெற்றிமணி, இன்று இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் மீண்டும் சாதனைகள் தொடர வெற்றிமணி வாழ்த்துகின்றது.

# உறக்கத்தை உணர்த்தும் கருவி!

## யேர்மன் நிறுவனத்தின் புதிய அறிமுகம்

– மாதங்கி




இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன் என்றால் ஒரு கார் வாங்கினால் அதற்கு ஸ்ரிக்கர் ஒட்டுவதும், அல்லது பின்பக் கத்திற்கு செட்டை போடுவதும், வெறும் அழகு படுத்தல் மட்டுமே நடக்கும்.

ஆனால் இன்று விஞ்ஞானம் அழகுடன் மட்டுமன்றி அனுபவக் கல்வியையும் உள்வாங்கி நமக்குத் தேவையான பல விடையங்களைச் செய்கின்றது.

முன்பு ஒரு திருமண வீட்டிற்குச் செல்வது என்றால், எங்கு ஏதும் பலுன் கட்டியிருக்கா என்று பார்ப்போம். அது தெரியாவிட்டால் நகரத்தை அண்மித்ததும், எரிபொருள் நிரப்புமிடத்தில் முகவரியைக் கேட்போம்.

அங்கு வேலை செய்பவர்களும் சொல்லிச் சொல்லி அலுத்து, நாம் வாகனத்தால் இறங்கி உள் நுழைந்ததுமே, அவர் நாம் கேட்காமலே நாம் போக வேண்டிய முகவரியைக் கூறுவார். அவ்வளவிற்கு அவருக்கு நம்மவர் தொல்லை தாங்க முடியாத தொல்லையாக இருந்தது.

ஆனால் இப்போ!

நினைத்த இடத்திற்கு எவருடைய அறிவுறுத்தலும் இன்றி நேராக etp Navi மூலம் சென்று இறங்கலாம். இது வரை வந்த கண்டுபிடிப்புக்களில் இன்றும் உச்சத்தில் நிற்பது இந்த நவிதான். அடுத்து இப்போ இன்னுமொரு உபகரணம் எமக்கு அறிமுகமாகின்றது.

பெரிய பெரிய விபத்துக்களுக்கு காரணம் சாரதி நித்திரை கொண்டு, கொண்டு, ஓடுவதே! இந்தத் தூக்கத்தை உடன் சாரதிக்கு அறிவிக்கத்தக்க கருவி ஒன்று இப்போ அறிமுகமாகியுள்ளது. அதுபற்றிப் பார்ப்போம்.

கார் ஓட்டும்போது சாரதி தூங்குவதை எச்சரிக்கும் புதிய கருவியை ஜேர்மனியை சேர்ந்த பாஷ் நிறுவனம் ஜேர்மனி நெடுஞ்சாலை போக்குவரத்து பாதுகாப்பு அமைப்புடன் இணைந்து சாரதி தூங்கு வதை எச்சரிக்கும் புதிய கருவியை பாஷ் உருவாக்கியுள்ளது.

ஸ்லீப் ஓ மீட்டர் என்ற பெயரிடப்பட்டுள்ள இந்த கருவி வாகனம் ஓடும்போது தூங் கினால் ஸ்டியரிங் வீலில் ஏற்படும் மாற்றங் களை வைத்தும், உங்கள் கண் மடலின் அசைவிலும், தசைகளின் அசை விலும் இந்த கருவி சாரதி தூங்குவதை கண்டு பிடித்து எச்சரிக்கும். மேலும், காரின் வேகம், ஆக்சிலேட்டர் உள்ளிட்டவற்றின் மாற்றங்களையும் இந்த கருவி கண் காணித்து சாரதி அயர்ந் துள்ளதை கண்டுபிடித்து எச்சரிக்கும். மேலும், இந்த கருவி மூலம் சாரதி அயர்ந்து விடும்போது ஏற்படும் விபத்துக்களை கணிசமாக குறைக்க முடியும் என்று கருதப்படுகிறது.

# காதோடு காதாக

– கலைக்கதிர் கதிர். துரைசிங்கம்

### பரிமாண வளர்ச்சியில்...



Lavatory மாற்றம் பெற்று Latrine ஆனது
Latrine மாற்றம் பெற்று Toilet ஆனது
Toilet மாற்றம் பெற்று Washroom ஆனது
Washroom மாற்றம் பெற்று Rest room ஆகிவிட்டது.

ஆனால் செய்யும் தொழிலே தெய்வம் என்று வந்த வேலையைச் செய்ய விடாது CellPhone, I Pad, Internet, Receving, Texting முதலியன தடை செய்கின்றனவே.

### ஒரு பிரபல சாமியாரிடம் சென்று ...



கந்தோரில் வேலை செய்யும் சக பெண்களுடன் நான் தொழில் சம்பந்த மாகப் பேசுவதை எனது மனைவி சந்தேகத்துடன் பார்க் கிறாள். பல சமயங்களில் என்னைத் தூக்கி யெறிந்தும் பேசுகிறாள். எப்படி என்னை மனைவிக்கு விளங்கவைப்பது? அதற்கு ஒரு உபாயம் கூறுங்களேன் குருவே.

சாமியார் : மனைவிக்கு விளங்க வைக்கும் உபாயம் எனக்குத் தெரிந்திருந் தால் நான் ஏன் சாமியார் ஆகிறேன்!

ஆயிரம் தடவை அளவெடு, ஒரு தடவை வெட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தர்சன் ஆதரவில் மாணவர் அரங்கம்

### பட்டம்



காற்றில் பறப்பது பட்டம் – உயர்
கல்வியில் கிடைப்பதும் பட்டம்

கைத்திறனால் அமைவது பட்டம்
அறிவுத்திறனால் பெறுவது பட்டம்

அதன் அழகை காணும்போது இன்பம்
இதன் அறிவைக் கேட்கும் போதே பேரின்பம்

உயரே உயரே பறக்க நல்ல நூல் வேண்டும்
உயர் பட்டங்கள் பல பெற நல்லாசான்கள் வேண்டும்.

அதன் ஆயுளே சில நாட்கள்
இதுவே ஆயுட்காலம் வரை

மழை காற்றால் அழிந்து விடும் இந்த துண்டு
இது காலத்தால் அழியாத கல்வெட்டு

ஏற்றங்கள் பல கொண்டு வரும் பட்டம்
அந்தப் பட்டங்கள் பெறுவதே எனது திட்டம்.

S.D. சித்தாரா
தரம் – 7
கம் / கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி, நாவலப்பிட்டி.

## எதிர்காலப் பெண்மணி



"பெண்மணி" என்றாலே எமக்கு நினைவுக்கு வருவது அடிமைத்தனம் தான். ஆனால் நாம் இல்லத்தரசி, வாழ்க்கைத் துணைவி என்றெல்லாம் அழைக்கின்றோம். முற்காலத்தில் பெண்ணே குடும்பத் தலைவியாக இருந்தாள். ஏன் முற்காலத்தில் பெரிய அளப்பரிய சேவைகள், தொண்டுகள், சாதனைகளையும் படைத்தது பெண்களே! உதாரணமாக எடுத்தால் 70 மணித்தியாலயம் 50 நிமிடங்களில் 48 தடவைகள் புவியைச் சுற்றி வந்து சாதனை படைத்தார் ஏழைப்பெண் "வலன்டினா வால்டிமிரோவா தெரெஷ்கோவா" அவர்கள்.

மற்றும் "கல்பனா சௌலா" எனும் இந்தியப் பெண்மணி 2003 ஜனவரி 16ம் திகதி தொடங்கி பதினாறு நாட்கள் விண்ணில் பயணம் செய்து புவிக்கு வர முப்பத்தொன்பது மைல் உயரத்தில் பயணம் செய்யும் போது "புளோரிடா" தொடுதளத்தில் இறங்குவதற்குப் பதினாறு நிமிடங்களுக்கு முன்பு டெக்ஸஸ் மாநிலத்தில விழுந்து விண்வெளி ஓடம் வெடித்துச் சிதறியது. பதினாறு நிமிடத்துக்கு முன்பு தன் உயிரை விண்ணுக்குத் தியாகம் செய்தார் கல்பனா. அதேபோல்தான் கண்ணகியும். அவ்வாறே முற்காலத்தில் வீரப்பெண்மணி "ஜான்சி ராணியையும் கூறுவர்.

அக்காலத்தில் அவ்வளவு வீரச்செயல்களைச் செய்யமுடியும் என்றால் ஏன் இக்காலத்து பெண்களுக்கு இயலாது. இவ்வாறான செயல்களை செய்வதற்கு எம்மால் முடியும். இனியும் ஏன் நாம் அடிமை வாழ்க்கை வாழவேண்டும். நவீன காலத்தில் இப்போது ஆண்கள் செய்யும் எந்த வேலையையும் யாராலும் செய்யமுடியாது என்றில்லை. ஆண்களால் செய்யமுடியாததைக் கூட பெண்கள் செய்கின்றனர். இதேபோல் செயற்பட்டு வெற்றி காண்போம்.

P. சாருக்ஷனா
தரம் – 7
க / கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி,
நாவலப்பிட்டி.

## ஏழையின் தோழன் நூலகம்...






கேமிலா ஆறாம் வகுப்பு மாணவி. அவள் படிப்பிலும், விளையாட்டிலும் படுசுட்டி. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் அவளைப் பரிய பாடசாலைகளில் சேர்ப்பதற்கு வறுமை இடமளிக்கவில்லை. இதனால் மனமுடைந்து போகவே அவளின் பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டு அவளைப் பெரிய பாடசாலையில் சேர்த்தார்கள்.

"கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற கூற்றைப் போலவே கேமிலாவும் தான் பயிலும் பாடசாலையில் சிறந்த கெட்டிக்காரியாகத் திகழ்ந்தாள்.

ஆனால் அங்கே எதற்கெடுத்தாலும் அந்தப் புத்தகம் வேண்டும், இந்த செயல்நூல் வேண்டும் என்று ஆசிரியர் கூறிக் கொண்டே இருப்பார். ஆனால் கேமிலாவால் எதுவுமே செய்யமுடியவில்லை.

அடுத்த நாள் ஆசிரியர் அனைவரது புத்தகங்களைப் பார்வையிடும் வேளையில் கேமிலா மட்டும் அழுதுகொண்டே இருந்தாள்.

ஆசிரியர் கேமிலாவை அன்புடன் அரவணைத்து அவளது பிரச்சினையை அறிந்துகொண்டு, அவளுக்கு நூலகத்தை அறிமுகம் செய்துவைத்தார்.

அன்று நூலகம் சென்றவள் தான்! அங்கு இருக்கும் அனைத்து நூல்களையும் கற்று இன்று பிரபல வைத்தியராகப் பணிபுரிகின்றாள்.

அவள் இன்று பெருமைப் படுவது என்ன வென்றால் "தனக்கு ஆசிரியர் நூலகத்துக்குச் செல் வதற்கான பாதையைக் காட்டவில்லை தனது வளமான எதிர்காலத் திற்கான திறவு கோலைக் காட்டியி ருக்கின்றார்" என்று நூலகங்களையே நன்றியுணர்வுடன் எண்ணுவது மட்டுமல்ல, தன்னை இந்நிலைக்கு உயர்த்தி அந்த நூலகத்திற்கு பல நூல்களையும் அன்பளிப்புச் செய்தாள்.

காரணம் என்னவெனில் நூல்களே வாங்கமுடியாமல் வறுமையில் இருந்தவளை இன்று அன்பளிப்புச் செய்யும் அளவிற்கு வசதி உடையவள் ஆக்கியது இந்த நூலகமன்றோ!

அம்பிகை பஞ்சலிங்கம்
க.பொ.த (உ/த) கலைப்பிரிவு
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.


## உங்களுக்குத் தெரியுமா?



1. மூன்று இரைப்பைகளைக் கொண்ட விலங்கினம்?
   ஒட்டகம்
2. மிக வேகமாகச் செல்லும் பாம்பினம்
   பிளாக்மாம்பா
3. தலையில்லாமல் ஒன்பது நாள் வாழும் உயிரினம்
   கரப்பான் பூச்சி
4. 2700 சுவை நரம்புகள் உள்ள மீனினம்
   ஊவ கௌா
5. கருவுறாத முட்டைகளை இடும் உயிரினம்
   குளவி
6. மிகச்சிறிய இதயம் உள்ள விலங்கு
   சிங்கம்
7. அதிக நீர் அருந்தும் பறவை
   புறா
8. வெள்ளை நிறத்தைக் கண்டு அஞ்சும் விலங்கு
   புலி
9. உலகிலேயே மிக மெதுவாக நடக்கும் பாலூட்டி
   கடலாமை
10. மிக நீண்ட ஆயுள் கொண்ட விலங்கினம்
    நீலத் திமிங்கிலம் (500 ஆண்டு)
11. மிகச் சிறிய முட்டை இடும் பறவை
    தேன்சிட்டு
12. காலைப் பிடித்துத் தூக்கினால் இறக்கும் பிராணி
    தாரா
13. பிறந்த அன்றே இறக்கும் உயிரினம்
    ஈசல்
14. நாய்க் குடும்பத்திலுள்ள மிகச்சிறிய உயிரினம்
    நரி
15. பருந்தின் ஆயுட் காலம்
    100 ஆண்டு

ஈ. அபிநயமேனன்
தரம் – 7,
யா/ பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## சிறுவர் கல்வி



கல்வி என்பது மூன்றெழுத்து
- அதில்
கற்க வேண்டியது பல எழுத்து
கல்வி என்னும் சோலையில்
நாம் படித்து மகிழ்வோம்
பேனா என்னும் ஆயுதம் ஏந்தி
எழுத்துக்களை எழுதுவோம்

புத்தகம் எனும் ஆயுதம் ஏந்தி
அறிவினைத் தீட்டுவோம்
இறுதிவரை போராடி
மாணவ சமுதாயத்தை கட்டி
- எழுப்புவோம்.

ம. கலைமதி
தரம் 9A
யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி.

visit our new show room...



சுந்தர்சன் Suntharsan

DISTRIBUTORS OF ELECTRIACL ITEMS AND ELECTRICAL APPLIANCES, WATER PUMPS.



சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி,
மானிப்பாய்

மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகிறோம்.


தொலைபேசி இல. : 021 222 2751
021 4591569
தொலைநகல் : 021 222 2751

உண்மையும் உழைப்பும் சேரும்போது வெற்றிகள் வாசல் கதவைத் தட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜமுகன் ஹாட்வெயர் ஆதரவில் சாதனையாளர் அரங்கு

# தேசிய மட்டத்தில் கோலூன்றிப் பாய்தலில் சாதனை!



யா/ அருணோதயக் கல்லூரி மாணவன் செல்வன் பா.லவணன் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் 17வயதின்கீழ் பிரிவில் 3.70 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து தங்கப்பதக்கம் பெற்றார். இவர் 2012ஆம் ஆண்டு கனிஷ்ட தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் 3.50 மீற்றர் பாய்ந்து தங்கப்பதக்கத்தைப் பெற்றார்.

இவர் சென்ற மாதம் நடைபெற்ற ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் வடமாகாணத்திலிருந்து பங்குகொண்ட மூவரில் ஒருவராவார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. லவணன் மேன்மேலும் சாதனைகளை நிகழ்த்தி புதிய சாதனை நிகழ்த்தவேண்டி வெற்றிமணி வாழ்த்துகின்றது.

# அருணோதயக் கல்லூரி மாணவி கோலூன்றிப் பாய்தலில் புதிய சாதனை!



யா/ அருணோதயக் கல்லூரி மாணவி செல்வி அருந்தவம் பவித்ரா 2011ம் ஆண்டு அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 17வயதின் கீழ்ப்பிரிவு கோலூன்றிப் பாய்தலில் உச்ச திறமையாக 3 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து அகில இலங்கையில் புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

இவர் 15ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் சென்ற மாதம் பங்குபற்றினார். இப்போட்டியில் பங்குபற்றிய 144 இலங்கை வீரர்களில் வடமாகாணத்தில் இருந்து பங்குபற்றும் மூவரில் ஒரேயொரு வீராங்கனை இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரை வெற்றிமணி சாதனையார் அரங்கு மேன்மேலும் சாதனைகள் படைக்க வாழ்த்தி மகிழ்கின்றது.

# தேசிய மட்டத்தில் தொடர் சாதனை!



யா/ அருணோதயக் கல்லூரி மாணவி செல்வி ச.தனுசா 2008ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கோலூன்றிப் பாய்தலில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்து வருகின்றார். இவர் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியமட்டப் போட்டியில் 21வயதின் கீழ் கோலூன்றிப் பாய்தலில் 3.10 உயரத்தைப் பாய்ந்து அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் சாதனை படைத்துள்ளார்.

கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டியிலும் 23வயதின்கீழ்ப் பிரிவில் 2.90 மீற்றர் பாய்ந்து இவ்வருடம் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். தேசிய மட்டத்திடல் தொடர் சாதனை புரிந்துவரும் வீராங்கனை தனுசாவை வெற்றிமணி சாதனையாளர் அரங்கு மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகின்றது.

# நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி மாணவியின் சாதனை!



க/ கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி மாணவியான குரும்பசிட்டியைச் சேர்ந்த செல்வி சிவாணியா ரவிநந்தா அண்மையில் நடைபெற்ற 265ஆவது மகாபொல கண்காட்சியின்போது பேச்சுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க அவர்களால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

செல்வி சிவாணியா அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளிலும் கட்டுரைப் போட்டிகளிலும் முதலாமிடத்தைப் பெற்றதுடன் கொழும்பு பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான கற்கைநிலையம் நடாத்திய கட்டுரைப் போட்டியிலும் முதலாமிடத்தைப் பெற்று தனது கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளார். இவரை வெற்றிமணி சாதனையாளர் அரங்கு மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்தி மகிழ்கின்றது.

# காரைநகர் மாணவன் நடனப் போட்டியில் சாதனை



யா/ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மாணவனான செல்வன் செந்தில்நாதன் பிரசாந்தன் மாகாண மட்டத்தில் நடைபெற்ற பிரிவு2 தனி நடனப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

முன்னதாக இவர் மாவட்ட மட்டப் போட்டியிலும் முதலாமிடத்தைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். செல்வன் பிரசாந்தனின் சாதனை தொடர வெற்றிமணி சாதனையாளர் அரங்கு வாழ்த்தி மகிழ்கின்றது.

# உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளின் சாதனை!



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற குழுநிலைப் போட்டிகளில் ஒன்றான ஹொக்கிப் போட்டியில் யா/உடுவில் மகளிர் கல்லூரி சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தும் இவ்வணி தேசிய மட்டத்திலும் சாதனை படைக்க வெற்றிமணி சாதனையாளர் அரங்கு வாழ்த்தி மகிழ்கின்றது.


உ
கற்பக விநாயகர் துணை

T.P. 2833

KMH

KAJAMUGAN HARDWARE

கஜமுகன் ஹாட்வெயர்

சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

*Hardware Merchants, Importers of Building Materials, Cement, Paints, Electrical Goods, Cycles, Cycle Parts & Accessories.*

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

147, 149, Stanley Road,
Jaffna.




உன் இலட்சியத்தை விட அதனை அடையும் வழி முக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகன் திருமண மண்டப ஆதரவில்

# சிறுவர் அரங்கம்


## My Ambition



My ambition is to become a scientist. Always I am referring science books. I watch discovery channel about science programme. My parents and teachers also help me to study. I work hard at home. When I become big I will research about satellite and environment. I like to invent new things also. I like to go for other planets. Science is my favourite subject.

**T. Kappil Washist**
*Grade 3*
*Leeds International School*
*Nawalapitiya.*

## கண்டுபிடி கண்ணே!



மரக்கிளைகளில் ஒளிந்திருக்கும் பெரியார்களைக் கண்டுபிடியுங்கள்.



## தாயன்பு தனியன்பு




தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை. அன்னை தந்தையே அன்பின் எல்லை என்றான் ஒரு கவிஞன். இதிலிருந்து நாம் தாயின் சிறப்பை அறிந்து கொள்ளலாம். எம்மைப் பத்து மாதம் சுமந்து பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பவள் தாய். எம்மை இரவு பகல் பாராது கண் விழித்து கண்ணை இமை காப்பது போல காத்து வருகிறாள். கடவுள் எல்லோரையும் தான் பார்த்துக்கொள்ள முடியாத காரணத்தால்தான் ஒவ்வொருவருக்கும் தாயைப் படைத்துள்ளார்.

ஒவ்வொரு ஜீவராசிக்கும் தாயைப் படைத்துள்ளான். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதில் முதலிடம் தாய்க்கே. துன்பம் வரும்போது மிருகங்களும் அம்மா என்றுதான் அழைக்கின்றன. இந்த உலகில் நாம் எதை இழந்தாலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் தாயைப் பெறமுடியாது. அதனால் தாயின் அன்புக்கு எல்லை இல்லை என்றே கூறிவிடலாம். அன்புக்கு எல்லை கூற முற்படுவோமேயானால் அந்த எல்லையும் அன்னை தான். இதிலிருந்து தாயன்பு தனியன்பு என்பதை உணர முடிகின்றது. தாயின் அன்பின் மூழ்கி இன்புறுவோம்.

ஈ. அம்சவி
தரம் 5,
யா/ இந்து ஆரம்ப பாடசாலை.

## பாட்டுப் பாடிய வெட்டுக்கிளி



கோடை காலம் வெயில் நன்றாகக் கொழுத்திக் கொண்டிருக்கின்றது. வெட்டுக்கிளி ஒன்று மரத்தின் அடிப்பாகத்தில் உள்ள வேரில் அமர்ந்து பாட்டுப்பாடிக் கொண்டிருந்தது.

அந்த வழியே எறும்புகள் கூட்டம் வரிசையாகச் சென்றுகொண்டிருந்தது.

அவை தமக்குத் தேவையான உணவை தமது வாயில் கவ்வியவாறு சென்றுகொண்டிருந்தன. சுமையோடு செல்வதால் வியர்த்துப் போய் மிகவும் களைப்பாகக் காணப்பட்டன. இருந்தாலும் மன உறுதியோடு தங்கள் உணவைச் சுமந்துகொண்டு சென்றன.

வெட்டுக்கிளி அவர்களைப் பார்த்து ஏளனம் செய்தது. முட்டாள்களே, உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கத் தெரியவில்லையே.... என்று கூறிவிட்டு தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தது.

எறும்புகளோ வெட்டுக்கிளியின் பேச்சை கருத்தில் எடுக்கவில்லை. தொடர்ந்து தங்கள் வழியே தங்களது புற்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன.

கோடை காலம் முடிந்து மாரி காலம் வந்தது. ஊர் முழுவதும் அடைமழை பிடித்துக் கொண்டது. மக்களோ உயிரினங்களோ வெளியே தலைகாட்ட முடியவில்லை. அன்றாடம் பிழைப்பு நடத்துபவர்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

கோடை காலத்தில் பாட்டுப்பாடி பொழுதைப் போக்கிக்கொண்டிருந்த வெட்டுக்கிளி சாப்பிட ஒன்றும் கிடைக்காமல் இறந்துபோனது. எறும்புகளோ தாம் கோடை காலத்தில் சேமித்து வைத்திருந்த உணவைப் பொருட்களைத் தின்று ஆனந்தமாய் இருந்தன.

காலம் பொன் போன்றது. அதை வீணாகக் கழிப்பவர்கள் ஒருநாள் வருந்த நேரிடும் என்பதற்கு வெட்டுக்கிளியே உதாரணமாகப் போனது.



## தீக்கோழி



தீக்கோழி உலகின் மிகப் பெரிய பறவை. 8 முதல் 10 அடி உயரம் வரை வளரும். 250 பவுண்ட் எடை. இதனால் பறக்க முடியாது. இதன் முட்டையின் எடை ஒன்றரைக் கிலோ. 24 கோழி முட்டைகளின் மொத்த நிறை. உலகிலேயே அளவில் பெரிய முட்டையும் தீக்கோழியினுடையதுதான். ஒரு மனிதன் இந்த முட்டையின்மீது ஏறி நின்றால்கூட அது உடையாது. அவ்வளவு உறுதி வாய்ந்தது. 10 முதல் 12 வரையுள்ள சிறு சிறு கூட்டங்களாக இவை வாழும். உலகின் இரண்டாவது அதிவேக உயிரினம். இரண்டு கால்களில் ஓடுவதில் முதலிடம். மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகம். ஆயுட் காலம் 30 முதல் 70 ஆண்டுகள். இவற்றின் கால்களுக்கு வலிமை அதிகம். சமயத்தில் சிங்கத்தைக்கூட ஒரே உதையில் கொன்றுவிடும். ஆனால் இதன் மூளையோ மிகச்சிறியது. அதனுடைய கண்ணின் அளவுதான் மூளையின் அளவும்.

உ. கவிநிலவன்
தரம் 5,
யா/ இந்து ஆரம்ப பாடசாலை.





# திருமுருகன் திருமண மண்டபம்

திருமண மற்றும் மங்கல வைபவங்கள் அனைத்தையும்
சிறப்பாக நடத்துவதற்கு ஓர் சிறந்த மண்டபம்
திருமுருகன் கல்யாண மண்டபம்

திரு.சிவசுப்பிரமணியம்
(செட்டியார்)
தொலைபேசி : 0776660211

கந்தசாமி கோவில் வடக்கு வீதி,
கரந்தன் வீதி, நீர்வேலி, யாழ்ப்பாணம்.


உன்முகம் அழகாக இருக்க கோபத்தை இழந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.




## எஸ். வி. முருகேசு ஆதரவில் மருத்துவ அரங்கு

# மேஸ்ட் செல் குறித்த குறித்த விஞ்ஞான அறிவு அன்றே தமிழர்க்கு இருந்தது!

மேஸ்ட் செல் குறித்த விஞ்ஞான அறிவு அன்றே தமிழர்க்கு இருந்தது.

வில்வம் பழம் தமிழரிடையே வயிற்றோட்டத்தை கட்டுப்படுத்தும் மருந்தாக இருந்து வருகின்றது. வில்வம் பழகத்துக்குச் சளி மற்றும் ஆஸ்த்துமா நோய்களைக் குறைக்கும் தன்மையும் பலவிதமான இருதய நோய் களைக் குணமாக்கும் ஆற்றலும் வில்வம் பழத்திற்கு உண்டு என்பது எம்முன்னோர் அனுபவ அறிவாக உள்ளது.



சீதக் கழிச்சலுடன் சேர்மூல நெஞ்சறிவு
ஓதக் கிராணியு மோடிப்போம் – பூதலத்தில்
ஆல்வளருங் கூந்தல்மட வாரணங்கே மக்கட்கு
வில்வப் பழத்தை விளம்பு

என்னும் வெண்பா வில்வம் பழத்தினுடைய மருத்துவப் பயன்பாட்டை எடுத்தியம்புகின்றது. வில்வம் பழத்தில் ஈஜிலின் என்னும் இரசாயன மூலக்கூறு உள்ளது என்பது இன்றைய விஞ்ஞான அறிவு. தற்பொழுது வில்வம் பழத்திலிருந்து பிரித்தெடுக்கப் பட்டு மருந்துத் தயாரிப்பில் இது பயன்படுத்தப்படுகின்றது.

உடலில் உள்ள மேஸ்ட் செல்கள் பல்வேறு அழுத்தங் களுக்கு உள்ளாகும் பொழுது அவற்றிலிருந்து சில இரசாயனப் பொருட்கள் சுரக்கின்றன. கிஸ்டமின், ரீனைன், கைமோஸ், கெப்ரின் என்பன அவற்றில் முக்கியமானவை. பொதுவாக மேஸ்ட் செல்கள் சாதாரணமான நியையில் எந்தக் கெடுதியையும் உடலில் ஏற்படுத்துவதில்லை. ஆனால் ஏதாயினும் புறக்காணி களால் தூண்டப்படுகையில் அவற்றிலிருந்து பல்வேறு வகையான புரதத் துகள்கள் வெளியேறுகின்றன. அதாவது தூண்டப்படும் மேஸ்ட் செல்கள் வெடிக்கின்றன. அப்பொழுது அவற்றிலிருந்து பல்வேறு வகையான புரதத் துகள்கள் வெளியேறுகின்றன. இவை மென்தசைச் செல்களைத் தூண்டுவதன் மூலம் பல்வேறு வகையான நோய்களுக்கு அவை வித்திடுவதாக இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் உணர்த்துகின்றன.

மேஸ்ட் செல்லின் இரசாயனச் சுரப்பான கிஸ்டமின் சிறுகுடலின் மென்தசைச் செல்களைத் தூண்டுவதால் குடல் இறுக்கம் உண்டாகி சீதம் கழிகின்ற வயிற்றோட்டம் ஏற்படுகின்றது.

வில்வம் பழத்திலுள்ள ஈஜிலின் கிஸ்டமினை எதிர்த்து மீண்டும் குடல் தன் பழைய நிலைக்கு வருவதற்கான எதிர்வினையை நடாத்துகின்றது. இதனால் சீதக்கழிச்சல் முற்றாகத் தடுக்கப்படுகின்றது.

இந்த உண்மையை அன்றே உணர்ந்த நம் முன்னோர் வில்வம் பழத்தை வயிற்றோட்டத்தை நிறுத்துகின்ற மருந்தாகப் பயன்படுத்தத் தொடக்கி வைத்துள்ளனர். மேலும் ஈஜிலின் நுழையீரலில் உள்ள மேஸ்ட் செல்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவ தினால் சளி மற்றும் ஆஸ்த்துமா போன்ற நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன. இவ்வாறே ஈஜிலின் இருதயத்தில் உள்ள மேஸ்ட் செல்களிலிருந்து சுரக்கும் ரினைன் புரதத்தைக் கட்டுப்படுத்துவதினால் பலவிதமான இருதய நோய்களைக் குணமாக்கும் தன்மையுள்ளதாக வில்வம் பழம் விளங்குகின்றது.

நம் முன்னோர்களின் அறிவுத்திறனை விளக்கும் இந்தத் தகவல்களை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில்இருந்து 2010இல் நிகழ்ந்தஉலகத் தமிழ் செம்மொழி மகாநாட்டில் ஆய்வாளராகக் கலந்து கொண்ட டாக்டர் அருள்வீரப்பன் அவர்கள் –


"வில்வம் பழ ஈஜிலின், மேஸ்ட் செல் மீது செலுத்தும் ஆதிக்கம் : தமிழ் இலக்கிய அறிவியலோடு இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியின் தொடர்பு" என்னும் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார்.

தமிழ் இலக்கியத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் என்ன தொடர்பு என்பவர்கள் கண்களைகசக்கிக் கொண்டு வாசிக்கவேண்டிய ஆய்வு இந்த ஆய்வு.



# ஆபத்தை ஏற்படுத்தும் வலி நிவாரண மாத்திரைகள்?





தலைவலி, உடல்வலி என்று எதற்கெடுத்தாலும் வலி நிவாரண மாத்திரை உட்கொள்பவர்களா? நீங்கள் அப்படியானால் உங்களுக் குத்தான் இந்தக் கட்டுரை. சின்ன சின்ன வலிகளுக்கெல்லாம் வலி நிவாரண மாத்திரை எடுத்துக் கொண்டால் சிறுநீராக புற்றுநோய் தாக்கும் அபாயம் உள்ளதாக ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு சிலருக்கு மாத்திரை போடுவதென்பது சாக்லேட் சாப்பிடுவதைப் போல. தலைவலி, கால்வலி என்று தொட்டதற்கெல்லாம் மாத்திரை போட்டுக் கொள்வார்கள். மருத்துவர்கள் பரிந்துரைப்பதைவிட தாங்களாகவே போட்டுக்கொள்பவர்களும் இருப்பார்கள்.

இப்படி அடிக்கடி வலி நிவாரண மாத்திரை உட்கொள்பவர்களுக்கு சிறுநீரக புற்றுநோய் ஏற்படும் என்ற அபாயம் உள்ளதாக பாஸ்டனில் உள்ள ஹவார்டு பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. ஹவார்டு மருத்துவக் கல்லூரி பேராசிரியர் இயாங்ஷோ தலைமையிலான குழுவினர் 1 லட்சத்து 25 ஆயிரம் பேரிடம் ஆய்வு மேற்கொண் டனர். அப்போது 10 ஆண்டுகளுக்கும் மேலாக வலி நிவாரண மாத்திரைகளை எடுத்துக் கொள்பவர்களில் 51 சதவிகிதம் பேர் சிறுநீரக புற்றுநோயால் பாதிக்கப் பட்டிருந்தது தெரியவந்தது.

### ஆபத்தை விளைவிக்கும் ஆஸ்பிரின்

வலி நிவாரணி மாத்திரையான ஆஸ்பிரின், டிஸ்பிரின் போன்ற மாத்திரைகள் உடனடியாக வலியைப் போக்கினாலும் மெல்லக் கொல்லும் ஆபத்தை விளைவிப்பவை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். வலி நிவாரணியாக அந்த மாத்திரைகளை உட்காள்ள ஆரம்பித்தவர்கள் ஒரு கட்டத்தில் அந்த மாத்திரைக்கு அடிமையாகிவிடு கின்றனர். புகைப்பழக்கத்திற்கும், குடிப்பழக்கத்திற்கும் அடிமையாவதைப் போல வலி நிவாரண மாத்திரை களை உட்கொள்ளாமல் அவர்களால் காலம் தள்ள முடியாது. இதனால் எண்ணற்ற நோய்த் தாக்குதலுக்கும் ஆளாகின்றனர்.

### சிறுநீரகம் செயலிழக்கும்

இந்த மாத்திரைக்கு அடிமையானவர்கள், மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி படிப்படியாகக் குறைந்துவிடும் என்பது மருத்துவர்களின் எச்சரிக்கை. வாழ்நாளில் ஆயிரம் வலிநிவாரணி மாத்திரைகளை உட்கொண்டவர்கள் நிச்சயம் சிறுநீரக செயல் இழப்புக்கு ஆளாவார்கள் என்றும் மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். சிலசமயம் நுரையீரல் தொடர் புடைய நோய் தாக்கும் ஆபத்தும் உள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர். ரத்தத்தைச் சுத்திகரிப்பது தடைப்படுகிறது. வயிறு புண்ணாகி அல்சர் நோய் ஏற்படும். பெண்களுக்கு மாதவிலக்கு சுழற்சியில் மாற்றம் ஏற்படும். மேலும் காது இரைச்சல், தோல் நோய்கள், முடி கொட்டுதல், சீரற்ற இதயத்துடிப்பு போன்ற நோய்களும் ஏற்படும் என்பது மருத்துவர் களின் எச்சரிக்கை.

### சிறு குழந்தைகளுக்கு ஆபத்து

கர்ப்பிணிப் பெண்கள் ஆஸ்பிரின் மாத்திரை உட்கொண்டால் அது குழந்தைகளையும் பாதிக்கும் என்பது ஆய்வாளர்களின் எச்சரிக்கை. சிறுவர்களுக்கு ஆஸ்பிரின், டிஸ்பிரின் போன்ற மாத்திரைகளைக் கண்டிப்பாகக் கொடுக்கக்கூடாது என்கின்றனர் ஆய்வாளர்கள். இதனால் நான்கு வயது குழந்தைகள் ஆஸ்பிரின் அல்லது டிஸ்பிரின் மாத்திரை உட்கொண் டால் நுரையீரல் செயலிழப்பு ஏற்படும் என்பது மருத்துவர்களின் எச்சரிக்கையாகும். எனவே உடலில் வலி தோன்றினால் உடனே மாத்திரை சாப்பிடுவதைவிட மருத்துவர்களை நாடவேண்டும் என்பதே ஆய்வாளர் களின் அறிவுரையாகும்.




உ
முருகன் துணை

**S.V. MURUGESU S.V. முருகேசு**

எம்மிடம் அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**Agent for**
*Unilever Sri Lanka Ltd.*
*Energizer Lanka Ltd.,*
*Fonterra Brand Lanka (Pvt) Ltd.,*
*Maliban Biscuit Manufactories Ltd.,*
*Shell Gas Lanka Ltd.*

**154, Hospital Road, Jaffna.**


உண்மை பேசுபவனிடத்தில் ஆண்டவன் அருகில் நிற்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ் ஆதரவில் ஆன்மீக அரங்கம்

**அன்பே சிவம்! சிவமே தமிழ்!!**

# இந்து ஆலயங்களும் கலைகளும்




ச. காருண்யா
*உயர்தரம் கலைப்பிரிவு 2013*
*யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி*

மனித நாகரிக வரலாற்றில் கலைகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இக் கலைகள் மனிதப் பண்பினை வளப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. "ஆய கலைகள் அறுபத்து நான்கு" என நம் முன்னோர் கலைகளின் எண்ணிக்கை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இவ் எண்ணிக்கை நாகரிக வளர்ச்சிக்கேற்ப அதிகரித்து விட்டதாயினும் கட்டடக்கலை, ஓவியக் கலை, சிற்பக் கலை, இசைக்கலை, நாட்டியக் கலைகளின் முக்கியத் துவம் குன்றவில்லை.

மனிதப் பண்பாட்டு வரலாற்றிலே நுண்கலைகள் முக்கியமான இடத் தினை வகிக்கின்றன. கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் முதலிய நுண்கலைகள் பல்வேறு நாடுகளிலே வெவ்வேறு அளவிலே கலைகள் இறைவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டன. குறிப்பாக இங்கு குறிப்பிடப்பட்ட கலைகள் தெய்வீக நிழலிலே தான் நன்கு வளர்ந்து வந்துள்ளன. இறை வனே வெவ்வேறு வடிவங்களில் கலைகளின் வடிவமாகவும் முடி வாகவும் கருதப்பட்டான்.

கட்டடக் கலையின் சிறப்பை நாம் இந்துக் கோயில்களில் காணலாம். இராஜ இராஜன் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயிலானது தென்னாட்டு வரலாற்றிலே குறிப்பிடத்தக்கது. இவ் ஆலயம் அனைத்து ஆலயங்களிலும் மிக உயர்வாகவும், பெரிதாகவும் உள்ளது. இவ் ஆலயம் தென்னிந்தியக் கட்டடக்கலையின் உச்ச நிலையைக் காட்டுகின்ற தலைசிறந்த படைப்பாக விளங்குகின்றது. இவ்வாலய கட்டட அழகைவிட சிற்பக் கலைமரபுக்கும் பெரும் தொண்டாற்றி உள்ளது. ஆலய கோபுரங்களில் காணப்படும் சிற்பங் கள் எமக்கு ஒவ்வொரு புராணக் கதையை உணர்த்தி நின்று எம்மை இறைவன் பால் இட்டுச் செல்வதை நாம் உணரலாம்.



ஓவியக் கலை பண்டைய காலத்தில் சுவர்களிலும் மரப் பலகைகளிலும் வரை யப்பட்டன. இவ் ஓவி யங்கள் அழிந்த போதிலும் குகைக் கோயில்களில் காணப் படுகின்றன. இச்சுவர் ஓவியங்கள் இன்றும் சிறப்புற்றுக் காணப் படுவதை அவதானிக்க லாம். குகை ஓவியங் களில் அஜந்தா குகை ஓவியம் தலை சிறந்து விளங்குகின்றது. ஆல யங்களில் இடம்பெறும் இதிகாச புராண செய்தி களையும், கடவுளரது திரு விளையாடல் களையும் ஓவியங் களாகத் தீட்டப்பட்டு ஆன்மீக வளர்ச்சியையும் இறை உணர்வையும் எம்மில் ஏற்படுத்துகின்றது.

நாட்டியக்கலையை நினைத்தவுடன் மனதில் எழுவது நடராஜரது திரு உருவமே. எனவே நடனக் கலை சமயத்துடன் சிறப்பாக இந்து சமயத்துடன் பின்னிப் பிணைந்து வளர்ந்து வந்துள்ளது. நுண் கலைகளில் காலத்தால் முந்தியது நாட்டியக்கலை எனக் கருதப்படுகின்றது. இவ்வழகியற்கலை மிகப்பழைய வரலாறு கொண்டதாகவும், பெரும்பாலும் சமய சூழ்நிலையிலே சமயக் கருத்துக்களையும், தத்துவக் கருத்துக்களையும் புலப்படுத்தி மக்களை ஆன்மீக வழிப்படுத்தும் சாதனமாகவே விளங்கிவந்துள்ளது. இறைவனை அடைவதற்கான சிறந்த வழிகளாக இசையும், நடனமும் கருதப்பட்டன.

நாயன்மார்கள் ஆலயங்கள் தோறும் திருநீற்றை யும், திருவைந்தெழுத்தையும் சிறப்பித்ததோடு இறைவனின் திருக்கோலக் காட்சியையும், தாம் இறைவனைக் கண்ட, கேட்ட இறைவனின் அருட் செயல்களை மக்களை உணரும்படி செய்தது நோக்கத் தக்கது. ஆலயங்கள் கலைகளின் நிலைக்களமாகத் திகழ்கின்றன. ஆலயங்கள் சமய உணர்வினையும், அறிவினையும் புகட்டும் நிலையங்களாக மட்டுமன்றிக் கவின் கலை நிலையங்களாகவும் மிளிர்கின்றன. ஆலய அமைப்பு, அதில் இடம்பெறும் சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவற்றிலே கவின்கலை குறிப்பாக இசையும், நடனமும் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளன. ஆலயமே ஒரு முழுமையான கவின்கலைக் கூட மாகவும் காட்சி அளிக்கின்றது.

கலை வடிவினனாய், கலைப் பிரியனாய், கலை ஆதரவாளனாய் விளங்கும் இறைவனை வழிபாடு செயயும் முறைகளிலே கலைகளும் குறிப்பிடப்படலாம். மலரினாலும், இலையினாலும், மனத்தினாலும் வழிபடுதல் போன்று இசையினாலும் நடனத்தினாலும் இறைவனை வழிபடும் முறை நன்கு போற்றப்படுகின்றது. "தமழோடிசையாக" விளங்கும் இறைவனை இலங்கையை ஆண்ட இராவணன் வீணைக் கொடியோன் எனவும், அவன் சாமகானம் பாடிச் சிவபெரு மானின் திருவருள் பெற்றான் என்ற நிகழ்வில் இருந்து கலையின் சிறப் பம்சத்தை நாம் காணலாம்.

ஆலயங்கள் மனித வாழ்க்கை முறையிலே சைவ மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்வையும், கலை யுணர்வையும் ஏற்படுத்தி கலையும், சமயமும் ஒன்றோடு ஒன்று பிணைந்து சமுதாயத்தை வளர்த்தோடு விழுமியப் பண்புகளை மக்களிடம் ஏற்படுத்துவதை நோக்கலாம்.

# ஈழத்தில் சைவசித்தாந்தம் வளர்த்த பெரியார் ஞானப்பிரகாச முனிவர்



திரு. க. ஈஸ்வரன் M.A.
*ஆசிரியர்*
*யா/ நாவற்குழி ம.வி.*

ஐரோப்பியர் ஆட்சிக் காலத்திலே ஈழநாட்டின் சுதேச சமயங்களான இந்து சமயமும் பௌத்தமும் பெரிதும் வீழ்ச்சியுறத் தொடங்கின. கிறிஸ்தவம் பெரிதும் வளர்ச்சி கண்டது. போர்த்துக்கேயரின் ஆட்சியில் சுதேச மக்களின் மத சுதந்திரம் பெரிதும் ஆட்டங்காணத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் சைவம் மேலோங்கி யிருந்தபோதிலும் கோவில் வழிபாடு விரதக் கிரியைகள் போன்ற அனுட்டானங்கள் முற்றாகத் தடைசெய்யப் பட்டன. தீவிர இந்து சமயப் பற்றுள்ள சிலர் தமிழகம் சென்று தமது அறிவைப் பெருக்கி வந்தனர். அத்தோடு யாழ்ப்பாண மக்கள் இரகசியமாகத் தமது சைவப் பண்பாட்டைப் பேணத் தவறவில்லை.

இத்தகையதொரு அரசியல் சூழ்நிலையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1625 - 1658) கார்காத்த முடிதொட்ட வேளாளராய் பாண்டி மறவர் குலத்தில் காராளபிள்ளை என்பவரின் புதல்வராகத் தோன்றினார் ஞானப்பிரகாசர். இவர் திருப்புகலூர் ஆதிசைவப் பெரியார் அண்ணா சாமிக் குருக்களிடம் சிவதீட்சை பெற்றவர். கௌதே சத்தில் பிராமண சந்நியாசியிடம் சமஸ்கிருதப் புலமை பெற்றார். சோழமண்டலத்தில் கண் இருந்த ஆதி சைவர்களுள்ளும் சைவப் பண்டாரங்களுள்ளும் திருவண்ணாமலை ஆதீனத்துத் தம்பிரான்களுள்ளும் பலருக்குச் சைவாகம உபதேசம் செய்தருளியவர். யாழ்ப்பாணத்துத் தமிழரிடையே சைவசித்தாந்த தத்துவத்தில் பெரும் ஈடுபாட்டை ஏற்படுத்திய மகான் களில் தலையாயவர் மட்டுமன்றிக் காலத்தால் முற்பட்ட வரும் ஆவார். ஈழத்தமிழ் மக்களது சைவசித்தாந்த வரலாற்றை முறைப்படி ஆரம்பித்து வைத்ததுடன் நில்லாது அவர்களுக்குச் சைவசித்தாந்தக் கல்வியில் மிகுந்த ஈடுபாட்டையும் ஏற்படுத்தியவர் ஞானப்பிரகாசர் ஆவார்.

ஞானப்பிரகாசர் பெயரிலே பல சைவப் பெரியார்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் காஞ்சி ஞானப்பிரகாசர், சிவபுரம் ஞானப்பிரகாசர், களத்தை ஞானப்பிரகாசர், மதுரை ஞானப்பிரகாசர், கமலை ஞானப்பிரகாசர், பளையூர் ஞானப்பிரகாசர், நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இங்கு நாம் கூறவந்தவர் சிதம்பரம் ஞானப்பிரகாசர். சாலிவாடிபுர (திருநெல்வேலி) ஞான்பபிரகாசர், திருவண்ணாமலை ஞானப்பிகாசர் என அழைக்கப்பட்டவர் ஆவார். இன்னும் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள், ஞானப்பிரகாச முனிவர் எனவும் அழைக்கப்படுகின்றார்.

ஈழத்தில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் போர்த்துக் கேயத் தலைவனுக்கு உணவுக்காக ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு பசுவை வழங்கவேண்டிய கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாணையை வெறுத்து பசுவதைக்கு அஞ்சி தமது நாள் வருவதற்கு முதல் நாள் இரவே தம் இருப்பிடத்தை விட்டுக் கடல் மார்க்கமாகத் தமிழ்நாட்டுக்குச் சென்றார். அங்கு திருப்புகலூர் ஆதிசைவராகிய பெரிய அண்ணாசாமிக் குருக்களிடம் தீட்சை பெற்று சிதம்பர வாசியான பின், கௌட்டதேசமடைந்து சமஸ்கிருத பாண்டித்தியமுள்ள பிராமண சந்நியாசியிடம் சமஸ்கிருத புலமை பெற்று சாஸ்திரங்களை முற்றும் அறிந்தார். பின் திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து சிவாகமங்களை ஓதி ஒணர்ந்து பின் அங்கிருந்து சிதம்பரம் அடைந்து பௌஸ்கராமக விருத்தி சிவஞானபோத விருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்னம், சிவசமாதி மான்மிய சங்கிரகம், ஓமத்ரிகற்பம் போன்ற நூல்களை வடமொழியில் எழுதினார்.

இன்று கிடைத்துள்ள சான்றுகளின்படி வைசித்தாந்த சித்தாந்த சிந்தனை மரபிற்கு செழுமையளித்த யாழ்ப்பாணத்தவர்களில் இவரே காலத்தால் முந்தியவர் எனக் கருதப்படுகின்றார். சைவசித்தாந்த சாஸ்திரங் களிலே சிவஞானபோதத்தின் வழிநூலாகிய சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குத் தமிழில் சிறந்த உரை எழுதியவர்கள் அறுவர். அவர்களில் மூன்றாமவராக இவர் விளங்குகின்றார். சிதம்பரம், மறைஞானதேசிகர், சிவாக்கிரக யோகியார், ஞானப்பிரகாச முனிவர், நிரம்பவழங்கிய தேசிகர், மாதவச்சிவஞானதேசிகர், மேலகரம் சுப்பிரமனிய தேசிகர் என்போரே அவ்வறுவரும் ஆவார். இவரின் பின் இலங்கையைச் சேர்ந்த பலர் சைவசித்தாந்தத்திலே ஈடுபட்டு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளனர்.

ஞானப்பிரகாச முனிவரின் பிற நூல்கள் என்ற வகையில் வடமொழி சிவஞானபோத விருத்தியும் எழுதியுள்ளார். மேலும் தமிழில் தீட்சாலட்சணம், தத்துவ வியாபார விவரணம், அவஸ்தாநிரூபணம், மகாவாய்யநிரூபணம் முதலான நூல்களும் எழுதி யுள்ளார்.

ஜேர்மனியிலிருந்து வெளிவரும் ஆன்மீகக் காலாண்டிதழ்
M. K. S. Sivakumaran
Bost Box 2765,
58477 Ludenschied,
Germany.
சிவத்தமிழ்
அறிவியலோடுஒட்டிய ஆன்மீகக் கட்டுரைகளை வரவேற்கின்றோம்.
மின்னஞ்சல்: Vettimaniy@hotmail.com.
00492351 458862

உண்மை பேசுபவனிடத்தில் ஆண்டவன் அருகில் நிற்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அரங்கு



அமரர் குரும்பசிட்டி செ. லோகதாசன் ஞாபகார்த்த விளையாட்டரங்கம். [முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மகாஜனக் கல்லூரி]



யாழ் மாவட்டத்தில் 19 வயதின் கீழ் நடாத்தப்பட்ட ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. வெற்றியீட்டிய அணியினரை படத்தில் காணலாம்.



யாழ் மாவட்டத்தில் 19 வயதின் கீழ் நடாத்தப்பட்ட பெண்களுக்கான கபடிப் போட்டியில் யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. வெற்றியீட்டிய அணியினரை படத்தில் காணலாம்.



யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே 15 வயதின் கீழ் நடாத்தப்பட்ட பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் யா/ அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. வெற்றியீட்டிய அணியினரைப் படத்தில் காணலாம்.



வலிகாமம் கல்வி வலயம் நடாத்திய 15 வயதின் கீழ் பெண்களுக்கான கபடிப் போட்டியில் யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.வித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. வெற்றியீட்டிய அணியினரை படத்தில் காணலாம்.



வலிகாமம் கல்வி வலயம் நடாத்திய அமரர் சிவஞானசுந்தரம் ஞாபகார்த்த சுற்றுக்கேடயத்திற்கான கபடிப் போட்டியில் 19 வயதின் கீழ்ப்பிரிவில் யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகி கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. இவ்வணியே யாழ் மாவட்ட சம்பியனையும் பெற்றுக்கொண்டது.



வலிகாமம் கல்வி வலயம் நடாத்திய அமரர் ஆ.சி. நடராஜா ஞாபகார்த்த சுற்றுக்கேடயத்திற்கான சதுரங்கப் போட்டியில் 19 வயதின் கீழ்ப்பிரிவில் யா/ மகாஜனக் கல்லூரி சம்பியனாகி கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.



யா/ காரை ஊரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது நடைபெற்ற இடைவேளை நிகழ்வில் மாணவர்களின் சாகச நிகழ்ச்சியைபடத்தில் காணலாம்.



யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தடகளப் போட்டியில் 11 வயதுப் பிரிவினருக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மாணவி இ.கார்த்திகாயினியைப் படத்தில் காணலாம்.

விளையாட்டு உள்ளத்தைப் பண்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Aptech ஆதரவில் பாடசாலை அரங்கம்

# ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 140ஆவது ஆண்டு நிறைவு!

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் அழகிய நீலக் குடாக்கடலுக்கு கிழக்குப்பக்கமாக மார்ச் 1872ல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உருவாகத் தொடங்கியது. யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க ஸ்தானிகர் மேதகு கிறிஸ்தோப்பர் பொஞ்ஞின் அ.ம.தி அவர்களின் காலத்தில் ஊர்காவற்றுறை பங்குத்தந்தையாக விளங்கிய பிரான்ஸ் நாட்டு மறை போதகர் அருள் திரு ஜே.பொய்சோ அ.ம.தி. அவர்களால் யாழ் குடாநாட்டிற்கு வெளியே முதன்முதலாக ஆங்கிலமும் கற்பிக்கும் கல்லூரியாக ஸ்தாபிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை வாழ் மக்கள் மனமுவந்து வழங்கிய ஆறு ஏக்கர் காணியில் கட்டி எழுப்பப்பட்ட புனித அந்தோனியார் கல்லாரியின் முதல் தலைமை ஆசிரியராக திருவாளர் ஏ.சுவாம்பிள்ளை நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து 1879 முதல் 1896 வரை அமலமரித் தியாகிகள் சபைக் குருக்களால் கல்லுாரி நிர்வகிக்கப்பட்டது.

1883ல் யாழ்ப்பாணத்தின் 2வது ஆயஉ மேதகு ெ'ன்றி யூலியன் அ.ம.தி ஆண்டகையின் காலம் முதல் இக்கல்லூரி துரித வளர்ச்சி கண்டது. தீவுப் பகுதியில் அருள்திரு J.N.S சந்திர சேகரம் அடிகளார் பணியாற்றிய போது தமது துறவற பணியை அப்போதுதான் ஆரம்பித்திருந்த புனித சூசையப்பர் சபை சகோதரர்களிடம் கல்லுாரியை ஒப்படைக்குமாறு ஆயரிடம் பெரிதும் வேண்டினார். அதற்கமைய 1896ல் அருட்சகோதரர்கள் டெனிஸ், பிலிப், பற்றிக் ஆகியோர் அடங்கிய புனித சூசையப்பர் சபைக்கல்விமான்கள் ஊர்காவற்றுறையை வந்தடைந்தனர். 1907ல் கல்லூரி ஆங்கிலப் பாடசாலையாகத் பதிவுசெய்யப்பட்ட பின்னர் ஆரம்ப பாடசாலைக் கட்டிடம் 1909ல் விஸ்தரிக்கப்பட்டது. அருட்சகோதரர்கள் போல், இன்னாசிமுத்து, பீற்றர் கிளமென்ற் ஆகியோரும் இப்பாடசாலைக்கென அனுப்பி வைக்கப்பட்டனர். 1918ல் இங்கு 250 மாணவர்கள் கல்வி கற்றபோது அவர்களுடைய பெறுபேற்று வீதம் 89 ஆக இருந்தது என சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். இப்பாடசாலையின் துரித வளர்ச்சியும் மாணவர்களின் பரந்த ஆங்கில கல்வி அறிவும் இப்பாடசாலையை ஆங்கில பாடசாலையாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற தீவுப்பகுதி மக்களின் அவாவும் 1921ல் நிறைவுகண்டது. 1921ல் இருந்து ஆங்கிலம், தமிழ் எனும் இரு பிரிவுகள் பாடசாலையில் இயங்கத் தொடங்கின. தமிழ்ப் பாடசாலையின் தலைமையாசிரியராக அருட்சகோதரர் பீற்றர் பணியாற்றிய போது திருவாளஉகள் ஞானப்பிரகாசம், இராசையா ஆகியோர் அவருக்குத் துணை புரிந்தனர். அருள்சகோதரர் பீறறர் போல் ஆங்கில பாடசாலையின் தலைமையாசிரிய ராக கடமையாற்றிய போது திருவாளர்கள் இராயப்பு, அருளானந்தம் ஆகியோர் அவருக்குத் துணை புரிந்தனர். தற்போதும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் பிரதான மண்டபமும் போட்டிக்கோவும் புனித அந்தோனியார் ஆலயத்தையும் பிரசித்தி பெற்ற ஊஉகாவற்றுறை இறங்குதுறையையும் எதிர் நோக்கிய விதமாக அருள்சகோதரர்பாக்கியநாதர் அதிபராய் இருந்த காலத்தில் கட்டி எழுப்பப்பட்டவையாகும்.

புனித சூசையப்பர் சபை சகோதரர்களின் மேற்பார்வையில் 1896 முதல் 1938 வரை இக்கல்விக் கூடம் பாரிய வளர்ச்சி கண்டது. "உன்னை பிறதர்மாரின் பள்ளிக்கூடத்தில் போட்டால் தான் நீ எல்லா விதத்திலும் சரி வருவாய்" என்று சொல்லி தீவுப் பகுதியின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இப்பாடசாலையில் சேர்க்க முண்டியடித்தனர். இப்பாடசாலைக்கென தம்மை முழுமையாக அர்ப்பணித்து அரும்பணியாற்றிய அருள் சகோதரர்கள் பிலிப், லீனஸ், மனுவேற்பிள்ளை, அலோசியஸ், சிறில் பேடினன், சைமன், பேதுறுப்பிள்ளை, ரைற்றிஸ், அலெக்ஸிஸ் ஆகியோர் இன்றும் மறக்கப்பட முடியாதவர்கள். அருள்சகோதரர் பேதுருப்பிள்ளை வீணைப் பெட்டி போடுவதிலும் பாடசாலை மணிக்கூட்டைத் திருத்துவதிலும் பெயர் போனவாரக இருந்தார். 1924 மார்ச் 9ல் மேதகு ஆயர் கியோமார் ஆண்டகை யாழ் ஆயராகப் பொறுப்பேற்ற பின்னர் கல்லூரி பல மாற்றங்களைக் கண்டது. 1938ல் கல்லூரி குருமாரின் பராமரிப்பில் கொண்டுவரப்பட்டது. இதன் முதல் அதிபராக இங்கிலாத்தில் கல்வி கற்ற சில்லாலையைச் சேர்ந்த அருள்திரு. A.S.ஜோசவ் அடிகளார் ஆயரால் நியமிக்கப்பட்டார். ஒழுங்கமைக்கும் திறனும் மிகுந்த கட்டுப்பாட்டாளனுமான இவரது காலத்தில் கல்லூரி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் வானளாவ உயர்ந்தது. லண்டன் ஒகஸ்போட்–கேம்பிறிஜ் பல்கலைக் கழகங்களிற்கிடையே நடைபெறும் படகு ஓட்டப்போட்டி போன்று ஊர்காவற்றுறை குடாக்கடலில் காரைநகர்–ஊர்காவற்றுறை இறங்கு துறைகளிற்கிடையில் படகோட்டப் போட்டிகளையும் நீச்சல் போட்டிகளையும் முதல் முதலில் ஆரம்பித்தவர் இவரேயாகும். இவ் வருடாந்த நிகழ்வு ஊர்காவற்றுறை மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஓர் நிகழ்வாகும். 1948ல் அருள்திரு. A.S.ஜோசவ் இறந்து சரித்திரமானார்.

1949 முதல் 1950 வரையிலான குறுகிய காலப் பகுதியில் அருள்திரு. வில்லியம் ஜேசுதாசன் அதிபராகக் கடமையாற்றினார். அருள்திரு. S.N.அருள்நேசன் அடிகள் 1951 முதல் 1952 வரை அதிபரானார். புனித பத்திரிசியார் கல்லுரியின் அதிபராக அருள்திரு லோங் அடிகளாரின் பணியை அவர் பெறுப்பேற்றார். அவரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் இவரின் பின் வந்த அருள்திரு.A.J.கருணாகரர் அடிகளாரால் முடித்து வைக்கப்பட்டது. அருட்திரு.A.J. கருணாகரர் அடிகள் 1952 முதல் 1954 வரை அதிபராக இருந்து அரும்பணியாற்றினார். பக்தியும் கட்டுப்பாடும் மிகுந்த அவரின் பதவிக்காலத்தில் கருணகரர் கட்டிடம் (Karunakarar block) கட்டப்பட்டது 1954 முதல் 1960ல் யாழ் புனித பத்திரிசியாா கல்லுரியின் அதிபராகும் வரை அருள்திரு.P.J. ஜீவரட்ணம் அடிகள் புனித அந்தோனியார் கல்லுரியின் அதிபராகவிருந்தார். ஜீவரட்ணம் கட்டிடம் என அழைக்கப்படும் புதிய அலுவலக கட்டடம் இவர் காலத்தின் அமைக்கப்பட்டது. விஞ்ஞானக் கல்வி இவர் காலத்தில் பெரிதும் வளர்ச்சியடைந்தது. இந்திய விஞ்ஞான பட்டதாரிகள் புதிதாக சேர்க்கப்பட்டனர். புனித அந்தோனியார் கல்லூரி விஞ்ஞானக் கல்வியில் முன்னிலை வகிக்கும் கல்லூரியாகத் திகழத்தொடங்கியது.


இன்றைய கல்லூரியின் முதல்வர்

1961ல் பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற்கப்பட்டபோது ஆயரின் பராமரிப்பில் இருந்து 186 கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில் 5 பாடசாலைகள் தவிர அனைத்தும் அரசிடம் கையளிக்கப்பட்டது. இந்த 5 பாடசாலைகளில் புனித அந்தோனியாா கல்லுரியும் ஒன்றாகும். யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ் திருக்குடும்ப கன்னியர மடம், இளவாலை ஹென்றியரசா கல்லூரி, அனுராதபுரம் சூசையப்பர் கல்லூரி ஆகியன ஏனைய 4ம் ஆகும். 1961ல் அருள் திரு.S.J. ஸ் ரனிஸ்லெஸ் கல்லூரியின் அதிபரானார். இவர் கல்லுரியின் எல்லா செயற்பாடுகளிலும் தானும் பங்கேற்று முன்னின்று உழைத்தார். உதைபந்தாட்டம் கூடைப்பந்தாட்டம் மெய்வல்லுனர் போட்டிகள் உடலியல் கல்வி என்பன இவர் காலத்தில் உயர்ந்த தரத்தை அடைந்தன. உள்ளுரிலும் மாவட்ட மட்டத்திலும் இப்போட்டிகளில் இக்கல்லூரி சிறந்து விளங்கியது. 1964ல் இளவாலை கென்றியரசர் கலலுரியின் அதிபராக இடமாற்றம் பெற்றார். இடமாற்றம் பெற்றபின் அருள்திரு.M.J.மரியாம்பிள்ளை அதிபரானார். அருள்திரு.M.J. மரியாம்பிள்ளை அடிகளாரின் காலத்தின் சமயப்பணி, சமூகப்பணி, இலக்கியப்பணி ஆகியவற்றில் கல்லூரி உயஉந்து நின்றது.

1969ல் அருள்திரு. அல்பிரட் பெஞ்சமின் அடிகள் கல்லூரியின் நூற்றாண்டு கால அதிபராகும் பெருமை பெற்றார். பக்தியும் அமைதியும் நிறைந்த இவர் ஒருவர்க்கும் ஒருபோதும் இல்லை என்று சொல்லாது பணிபுரிந்தார். ஊர்காவற்றுறை பழையமாணவர் சங்கம், கொழும்பு பழைய மாணவர் சங்கம் என்பவற்றைச் ஸ்தாபித்து அவர்களின் உதவியோடு எமிலியானுஸ்பிள்ளை தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தை நிறுவினார். இந்நிலையம் தொழில் நுட்ப பாடங்களை ஆஉவமுள்ள மாணவஉக்கும் பாடசாலைக்கல்வியை முடித்த மாணவர்க்கும் கற்பிக்க பெரிதும் உதவியது. யாழ் ஆயர் மேதகு எமிலியானஸ்பிள்ளை ஆண்டகை 1972ல் திடீரென இறந்த போது இக்கல்லூரி பலத்த பொருளாதார தாக்கத்திற்கு உள்ளானது. இக்கல்லூரி தொடர்ந்தும் தனியார் கல்லூரியாக இயங்க வேண்டுமென்ற பெற்றோரினதும் பழை மாணவர்களதும் நலன்விரும்பிகளதும் பேரவா ஆட்டம் கண்டது. 1973ல் அருள்திரு. S.J.ஸ்ரனிஸ்லெஸ் அடிகள் இங்கிலாந்தில் இருந்து வந்து இரண்டாவது தடவையாக அதிபர் பொறுப்பை சொற்ப காலம் ஏற்றார். 1974ல் அருள்திரு சூசைப்பிள்ளை அடிகள் அதிபரானார். ஆவரின் வழிநடத்தலில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் முழுமையாகத் தரமுயர்த்தப்பட்டு கலை வர்த்தக விஞ்ஞான உயர்தர வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவர் மார்ச் 1976ல் இடமாற்றம் பெற்றார்.

மேதகு தீயோகுப்பிள்ளை ஆண்டகை ஆயராக இருந்த போது கல்லூரியில் 23.09.1957 முதல் ஆசிரியராக இருந்த திருவாளர் S.A.E. இரட்ணராஜா அவர்களை 09.04.1976ல் கல்லூரியின் அதிபராகினார். கல்லூரியின் தொடக்க காலத்தில் பொது நிலையினர்

Aptech
COMPUTER EDUCATION
Unleash your potential
INDIA
MCIS
APTECH - அறிமுகம் உலகில்
• 25 வருட கல்விச் சேவை
• ISO சான்றிதழ்
• 65 இலட்சம் மாணவர்கள்
• 40 நாடுகள்
• 1500 கிளைகள்
விசேட சலுகை...! இன்றே இணையுங்கள்
VIDYA
Operating System
CPU Architecture
MS Office
Internet & email
Create Web Pages
கணனிக்கற்கை நெறியில் இணைபவர்களுக்கு ஆங்கில அல்லது சிங்கள வகுப்பு இலவசம்
O/L, A/L ICT
BANKING COURSE
CBF, DBF
ENGLISH, SINGALA
AUTOCAD
0212219456
APTECH Computer Education - Jaffna Branch
Mind Vishion College of International Studies (Pvt.) Ltd.
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக இருந்த பின் நூற்றாண்டு காலமாக அருட்சகோதரர்களாலும் குருமாரினாலும் மட்டுமே இக்கல்லூரி வழிநடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஊர்காவற்றறை பெற்றோர் ஆயரை வேண்டிக் கொண்டதன் பெயரில் நூற்றாண்டு கால ஆண்கள் கல்லூரியில் பெண்களும் உயர்தர வகுப்பிற்கு அனுமதிக்கப்பட்டனர். முதல் தடவையாக ஆசிரியைகளும் கல்வி கற்பிக்க அழைக்கப்பட்டனர். பெப்ரவரி 1, 1978ல் புனித அந்தோனியார் கல்லூரி அரசிடம் கையளிக்கப்பட்டது. பணிப்பாளர் மேற்பார்வை கல்லுரியாகவிருந்த பின்னர் மே 01, 1978ல் வர்த்தமானி மே 35-4/5/1979 கட்டளை இலக்கம் 2621 இன்படி அரச அதிகாரம் பெற்ற கல்லூரியாகியது. அத்தோடு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் 1AB தரமுடைய ஒரேயொரு கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதுடன் தீவுப்பகுதியின் பிரபல்யம் வாய்ந்த கல்லுரியாகவும் மாறியது. 1986 ல் கொத்தணி முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது ஊர்காவற்றுறை கொத்தணி பாடசாலையாக நிறுவப்பட்டு 10 பாடசாலைகள் அதன் கீழ் கொண்டுவரப்பட்டன. புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் கொத்தணி அதிபரானார். சிறிய புஸ்பம் மகளிர் ம.வி, கரம்பொன், சண்முகநாதன் ம.வி, கரம்பொன், சிவகுருநாதன் வித்தியாசாலை, றோமன் கததோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலை, ஊர்காவற்றுறை, நாரந்தனை றோமன் கத்தோலிக்க ம.வி, கணேசா வித்தியாசாலை, நாரந்தனை, தம்பாட்டி அரசினா தமிழ் கலவன் பாடசாலை, தம்பாட்டி, மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, கதிரேசானந்த வித்தியாசாலை, பருத்தியடைப்பு ஆகிய பத்து பாடசாலைகளும் ஊர்காவற்றுறை கொத்திணியின் கீழ் இயங்கின.

1990ல் உள்நாட்டுப்போர் ஆரம்பமானபோது காரைநகர் கடற்படைத்தளத்திற்கு அருகாமையில் இருந்த ஊர்காவற்றுறை கரைப்பகுதியை விட்டு மக்கள் வெளியேறியபோது கல்லூரியும் மூடப்பட்டது. ஆவணி 6, 1990ல் விமானப்படைக்குண்டு வீச்சு விமானங்கள் ஊர்காவற்றுறை கரைப்பகுதி மீது குண்டுகளை வீசிய போது ஒரு குண்டு கல்லூரி நிர்வாகக் கட்டிடத்தின் மீது விழுந்து கட்டிடம் முழுமையாக சேதமாக்கப்பட்டது. ஆவணி 22, 1990ல் இராணுவ நடவடிக்கைகள் ஊர்காவற்றுறையில் ஆரம்பமானபோது மக்கள் எல்லோரும் சுருவில் புனித மரியாள் ஆலயத்தில் தஞ்சமடைந்தபடியால் ஒக்டோபர் மாதம் வரை தீவுப் பகுதிப் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. நவம்பர் மாதம் முதல் புனித அந்தோனியாா கல்லூரி மிகவும் குறைந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் ஒரு தனியார் வீட்டில் இயங்கத் தொடங்கியது. ஊர்காவற்றுறை கொத்தணி பாடசாலைகளும் இணைந்து காலை மாலை வகுப்புகளை தற்காலிக கொட்டகைகளின் கீழ் கிடைத்த தளபாடங்களுடன் நடாத்தத் தொடங்கின.

ஏப்பிரல் 26,1992ல் இராணுவம் சரவணையை நோக்கி முன்னேறிய போது மக்கள் எல்லோரும் சுருவிலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்தார்கள். யாழ் மத்திய கல்லூரியில் ஊர்காவற்றுறை கொத்தணி மாலை நேரங்களில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியது. தை 1992ல் யாழ் பரியோவான் கல்லூரி முகாமையாளர்களின் நல்லெண்ணத்துடன் ஊர்காவற்றுறை கொத்தணி யாழ் பரியோவான் அக்கடமியில் இயங்கத் தொடங்கியது. மே 27, 1995ல் கல்லூரி அதிபர் திரு S.A.E.இரட்ணராஜா அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறினார். பல தசாப்தங்களாக கல்லூரியை வளர்ச்சிப் படிகளை நோக்கி இட்டுச் சென்ற இவரை தொடர்து திரு K. இரட்ணசிங்கம் அதிபராக நியமனம் பெற்றார். நவம்பர் 1995ல் இராணுவம் யாழ் நகரைக் கைப்பற்றி போது மக்கள் இடம்பெயர கல்லூரியும் இடம்பெயஉந்து உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் சிறிது காலம் தற்காலிகமாக இயங்கியது. மே 1996 ல் மக்கள் யாழ் நகருக்கு தம் சொந்த இடங்களிற்கு திரும்பிய போது புனித அந்தோனியார் கல்லூரியும் தீவுப்பகுதிக்க திரும்பியது. எனினும் கட்டிடங்கள் எவையும் வகுப்புகளை நடாத்துவதற்கு உகந்த நிலையில் காணப்படாமையால் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தியாலய ஆரம்ப பிரிவுக் கட்டத்தில் தற்காலிகமாக சில காலம் இயங்கியது. குண்டு வீச்சினாலும் எறிகணைத்தாக்குதல்களினாலும் மிக மோசமாகத் தாக்கப்பட்டு பாவிக்க முடியாத் நிலையில் இருந்த இக் கல்லூரி மார்ச் 3, 1997ல் சிறிய திருத்தங்கள் செய்யப்பட்டு தன் சொந்த கட்டடத்தில் இடத்தில் இயங்கத் தொடங்கியது.

1997ல் தனது 125வது ஆண்டு நிறைவினை நினைவு கூர்ந்த இக்கல்லூரிக்கு அதனை சிறப்பாக் கொண்டாடக் கூடிய நிலைமை அப்போது காணப்படவில்லை. எனினும் அவ்வாண்டில் புனித கென்றி அரசர் கல்லூரியில் உப அதிபராகவிருந்த அருள்திரு.து.யு.ஜேசுதாஸ் அவஉகள் ஆசிரியர் குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்டது ஓர் குறப்பிடத்தக்க விடயமாகும். 1997–99 காலப்பகுதியில் GTZ நிறுவனத்தினால் 6 பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட போது புனித அந்தோனியார் கல்லூரியும் அவற்றில் ஒன்றானது. கல்லூரிச் சமூகத்தின் வேண்டுகோளிற்கிணங்க சிதைவுற்ற நிலையில் காணப்பட்ட இக் கல்லூரி அதன் முன்னைய கலையம்சம் மிக்க நிலைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது. அதிபர் திரு. K.இரட்ணசங்கம் அவர்கள் இப்பணியை சிறப்பாக செய்து முடித்தார், பெப்ரவரி 10,1999 அன்று புனரமைக்கப்பட்ட கலலூரி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.



*இவ்வருடம் மாகாண மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகிய உடற்பயிற்சி அணியினருடன் அதிபர் பொறுப்பாசிரியர்கள்*

ஏப்பிரல் 1, 2000ல் அதிபர் திரு.K.இரட்ணசிங்கம் அவர்கள் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச்செல்ல பிரதி அதிபராகக் கடமையாற்றிய அருள்திரு.J.A. ஜேசுதாஸ் அடிகளார் அதிபர் பெறுப்பினை ஏற்றுக் கொண்டார். நூற்றாண்டு காலமாக அருள்சகோதரர்களினாலும் குருமாரினாலும் வழிநடாத்தப்பட்ட கல்லூரி மீண்டும் குருமாரின் தலைமைத்துவத்தில் கொண்டுவரப்பட்டது வரலாற்றில் ஓர் குறிப்பிடத்க்க அம்சமாகும். கட்டிடங்கள் யாவும் புனரமைக்கப்பட்டபின் பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலமாக அருள்திரு.J.A.ஜேசுதாஸ் அடிகளாரின் காலம் அமைந்திருந்தது. இம் முயற்சியில் தம்மை முழுமையாக அாப்பணித்த அவர் கல்வியிலும் விளையாட்டிலும் முழுக்கவனத்தையும் செலுத்திவந்தார். முன்னைய புகழையும் பெருமையையும் மீண்டும் நிலைநாட்டுவதில் அவர் வெற்றி கண்டார். பொதுப்பரீட்சைகளில் குறிப்பிடத்தக்களவு படிப்படியான சித்தி வீத உயர்வும் விளையாட்டில் அகில இலங்கை சம்பியனாக உடற் பயிற்சி அணி 2008ல் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

கல்லுரியின் வளமேம்பாட்டைப் பொறுத்தவரை கணணிக் கற்கை நிலையம், விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றும் நூலகம் போன்றவை அவர் மேற்கொண்ட தீர்க்கமான முடிவுகளின் பயனாகக் கிடைத்த வளங்களாகும். விளையாட்டுத் துறை விருத்திக்காக 400m ஓடுபாதை கொண்ட மைதான உருவாக்கத்திற்கான ஆரம்ப முயற்சிகளையும் அவர் மேற்கொண்டிருந்தார். பாடசாலையின் வளர்ச்சியில் பக்கபலமாகத்திகளும் பழைய மாணவர் சங்கங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அமைத்தும் புதுப்பித்தும் பல நன்மைகளை கல்லூரிக்குப பெற்றுக்கொடுத்தார். ஏழை மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு ஆரம்பித்த "கிறிஸ்துஇல்ல" விடுதியானது கல்லூரியின் ஓர் பயன்மிக்க ஆதாரமாக அமைந்ததை யாரும் மறுக்க முடியாது. மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றிவந்த அடிகளார் யாழ் ஆயர் அவர்களின் பணிப்பிற்கிணங்க 09.02.2009ல் ஒத்து மாறல் அடிப்படையில் புனித கென்றியரசர் கல்லூரிக் இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு அதிபராகக் கடைமையாற்றிவந்த அருள்திரு க. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் புனித அந்தோனியாா கல்லூரி அதிபராக அதே திகதியில் பெறுப்பேற்றுக் கொண்டார்.

இதேவேளை ஆசிரியராகக் கடமையாற்றிய அருட்திரு. எம் சோபன் ரூபஸ் அடிகளார் யாழ்ப்பாணம் நாவாந்துறை றோ.க.ம. வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல அங்கு ஆசிரியராக கடமையாற்றி வந்த அருள்திரு அ.றொபின்சன் ஜோசவ் அடிகளாரும் புனித அந்தோனியார் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டதுடன் "கிறீஸ்து இல்ல" விடுதியை நிர்வகிக்கும் பெறுப்பும் ஆயரால் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அருள்திரு க. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் கல்வி ஒழுக்கம் மற்றும் இணைப்பாட வ்தான செயற்பாடுகள் என்பவற்றில் அதிக அக்கறை கொண்டவராக செயற்பட்டு வருகின்றார். 2011லும் எமது கல்லூரி உடற்பயிற்சி அணி அகில இலங்கை சம்பியனாக தெரிவு செய்யப்பட்டமையும் அஞ்சலோட்ட போட்டியில் தேசிய மட்ட வெற்றிகளைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத் தக்கவையாகும். மேலும் கணினி அறிவை மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் வளர்த்து அதன் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்ததுடன், 2010ல் தகவல் தொழில்நுட்ப போட்டியில் வெற்றிபெற்றதுடன், கல்லூரியை அகில இலங்கைப் பாடசாலைகளின் கணினி வலையமைப்பில் இணைத்துக் கொண்டதும் பெருமைக்குரிய விடயங்களாகும். அத்தோடு கூடைப்பந்தாட்டம் மற்றும் றக்பி போன்ற விளையாட்டுக்கள் 2012ல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட முடியும். அருள்திரு அ.றொபின்சன் ஜோசவ் மேற்படிப்பிற்காக 2011 செப்ரெம்பரில் வெளிநாடு சென்றதைத் தொடர்ந்து "கிறீஸ்து இல்ல" விடுதியை நிர்வகிக்கும் பெறுப்பையும் அதிபர் அவர்கள் பெறுப்பேற்றுள்ளார். கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் துணையாக விளங்கும் பழையமாணவர்களுடன் தொடர்பு கொண்டு பழைய மாணவர் சங்கங்களின் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டுவதுடன் அவர்களின் உதவிகளுடன் பல முன்னேற்ற வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுததப்படுகின்றன.

140வது ஆண்டு நிறைவில் காலடி பதித்திருக்கும் இக்கல்லூரி தொடந்தும் வளர்ச்சிப் படியில் முன்நோக்கிச் செல்ல கல்வித் துறையின் அண்மைக்கால அபிவிருத்தித் திட்டமான 1000 பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தில் முதற் தொகுதிப் பாடசாலைகளுள் ஒன்றாக இணைத்துக் கொள்ளப்படும் என்ற ஆளுனர் அவர்களின் அறிவிப்பின் பிரகாரம் துரித வளர்சிசிகாண ஆவலுடன் காத்திருக்கின்றது.

# "தெல்லிப்பளை" எனும் இடப்பெயர் பற்றிய நோக்கு

தெல்லிப்பளை எனும் பெயர் உருவாகிய காரணம் பற்றி எடுத்து நோக்கும்போது பளை என்பது மக்கள் வாழும் பகுதி, மாவட்டம், மாகாணம் எனப் பொருள்தரும். பள்ளி, பளை என்பது ஒரு பொருட் கிளவிகளாகும். பள்ளி என்றால் நகரம், இடம், சிற்றூர், நித்திலை, மக்கள், படுக்கை, வீடு, சாலை என தமிழ் அகராதி கூறுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈறு கொண்டனவாக தெல்லிப்பளை, பளை, புலோப்பளை, பெரியபளை, வரத்துப்பளை, விடத்தற்பளை போன்ற இடங்கள் அமைந்துள்ளன.

தெல்லிப்பளை ஸ்ரீ தெல்லி + பளை இதன் அயலிடத்திற் பளை என்ற பெயர் கொண்ட ஓரிடமுண்டு. தெல்லி என்ற தலைவனின் ஆணைக்குட்பட்ட பளைப்பகுதி தெல்லிப்பளை என சிறப்புப் பெயர் பெறுவதாகும். இத்தெல்லிப்பளையில் தெல்லிவளவு, தெல்லியம்பறை என்ற காணிப்பெயர்களும் வழக்கத்தில் உள்ளன. மன்னார் மாவட்டத்தில் தெல்லியம் குடியிருப்பு என்ற ஓரிடம் உண்டு. தெல்லி என்பது பில்லி என்ற பெயரிலிருந்து மருவியிருக்கமுடியுமா? என லூயிஸ் ஐயம் கொள்கிறார். இதைச் சிலர் தெல்லிப்பள்ளி, தல்லிப்பள்ளி என்று குறிப்பிட்டு அதற்கு கதையும் புனைந்தனர். மாவிட்டபுரத்தின் அயற்பகுதியே தெல்லிப்பளை. மாருதப்புரவீகவல்லி தனது குதிரைமுகம் நீங்கி இளமையும் வனப்பும் பொருந்தப்பெற்று இவ்விடத்திலேயே தங்கியிருந்தாள் என்றும் இதனாலேயே இவ்விடத்திற்கு தல்லிப்பளை என பெயர் ஏற்பட்டதும் ப்ழைய மரபுக்கதையாகும். இதனால் இப்புறம் பகுதியை "தெல்லியம்பதி", தெல்லி நகர் என அழைத்தனர். தெல்லிப்பழையில் 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த பேதுருப் புலவர் தான் கிளானி கத்தோலிக்க தேவாலயத்தின் மீது பாடிய நூலிலே "சந்தியோகுமைன் அம்மானை" என்ற நூலிலே தெல்லிப்பளை பற்றி –

"இலங்கா புரியிருக்கும் யாழ்ப்பாண இராச்சியத்தில்
துலங்கு மெண்ணால் பதிக்கும் துண்கமுடிபோலுயர்ந்த
வல்லிக் கிராமத்தில் வளர்ந்த திருநகராம்
தெல்லிக்கிராமமெனும் சீர்சிறந்த பேரூரில்

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த மாவை சின்னகுட்டி புலவர் பாடிய தண்டிகை கனகராயன் பள்ளின் 51ம் செய்யுளில் –

"பங்கமான சங்கதோங்கிய வாலி மேலிரு
தெல்லிப்பளை நாளும் வாழவென்று கூவாய் குயிலே..."

பண்டைய நாளிலே தொண்டை மண்டல காரைகாட்டு வேளாளர் பலர் இங்குவந்து குடியேறி வாழ்ந்துள்ளதாக அறியப்படுகிறது.

கு. கோபிராஜ் *B.A(Hons) Hin Sp.*
மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழியும் பண்பாடும் 10

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்களைக் காலம் உணர்த்தும். அந்த மாற்றங்களைச் சுட்டிக்காட்டுவதற்குச் சில சொற்கள் தோன்றியுள்ளன. தமிழ் மொழியில் உருவாகிய அச்சொற்கள் பண்பாட்டைப் புலப்படுத்தும் பணியையும் ஆற்றுகின்றன. தமிழர் பண்பாடு மனித உடல் வளர்ச்சியோடும் பருவ மாற்றங்களோடும் பெரிதும் இயைபுபட்டுள்ளது. அத்தகைய சொற்களில் நரை, திரை, மூப்பு என்னும் மூன்று சொற்களும் இன்று நாம் அறியவேண்டியவை. மொழி பண்பாட்டுப் பதிவை எவ்வாறு செய்திருக்கின்றதென்பதை இச்சொற்களின் பயன்பாட்டால் தெளிவாக அறியமுடியும்.

இம்மூன்று சொற்களும் மனிதனின் முதுமைப் பருவத்தை முறையே உணர்த்தும் சொற்களாகும். பண்டைய இலக்கியங்களில் இச் சொற்களின் பயன்பாடு சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. புறநானூற்றுப் பாடல் ஒன்றின் அடிகள் இதற்குச் சான்றாக உள்ளன.

"பல்சான்றீரே பல்சான்றீரே
கயல்முள் ன்ன நரைமுதிர் திரைகவுன்
பயனில் மூப்பிற் சான்றோரே...." (புறம் :195)

இதன் பொருள் பல நல்ல குணங்களையுடையவரே! பல நல்ல குணங்களையுடைவரே கயல்மீனின் முள் போன்ற நரைமுதிர்ந்த திரைந்தகதுப்பையும் உடையவரே! பயனில்லாத முதுமையையும் உடையவரே! பல நல்ல குணங்களையுடையவரே! என்பதாகும். இங்கு நரை ஓர் உவமை மூலம் விளக்கப்பட்டுள்ளது. வயது முதிர்ச்சி ஏற்படும்போது தலைமுடியும் நிறம் மாறுவதை இப்பாடலடிகள் சுட்டியுள்ளன. நரை, திரை, மூப்பு என்னும் மூன்று சொற்களும் வயது முதிர்ச்சியின் அடையாளததைக் குறிப்பனவாக உள்ளன. நரை என்பது தலைமுடியின் நிறமாற்றத்தைக் குறித்து நிற்கிறது. திரை என்பது கண்களை அண்டிய பகுதியின் மாற்றத்தைக் குறித்து நிற்கிறது. இதே போன்று மூப்பு என்பதும் செயற்பாடற்று இருக்கும் நிலையைக் குறித்து நிற்கிறது.





அகநானூற்றுப் பாடலொன்று மூப்புப் பற்றிக் குறிப்பிடும்போது நாட்கள் செல்லச் செல்ல மூப்பு மனிதரை வந்தடையும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நற்றிணைப் பாடல் பெண்ணொருத்தியின் முதுமை நிலை பற்றிக் கூறும்போது –

'நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்'

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே 'நரை' என்ற சொல் கூந்தலின் நிறமாற்றத்தைக் காட்டி நிற்கிறது. இல்லறத்தில் இணைய விரும்பும் ஆணும் பெண்ணும் நரை தோன்றினாலும் பிரியாமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற பண்பாட்டு வரையறை இவ்வடியிலே பதிவு செய்யப்பட்டுள்ளது.

குழந்தைகளைப் பராமரிப்பதற்கு முதிய பெண்களே வேலைக்கு அமர்த்தும் பண்பாடு முற்காலத்தில் இருந்ததை நற்றிணையின் இன்னொரு பாடல் பதிவு செய்துள்ளது.

'அரிநரைக்கூந்தல் செம்முது செவிலியர்'

என்ற பாடலடி இதனை நன்கு புலப்படுத்துகின்றது. மெல்லிதாக நரைத்த கூந்தலையுடைய செவ்விய முதுமையுற்ற செவிலித் தாயரே அன்று குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தனர். வாழ்வியல் அநுபவமும் வயது முதிர்ச்சியும் குழந்தை வளர்ப்பிலே பண்பாட்டு நடைமுறைகளை எளிதில் பதியவைக்கும் என்ற நம்பிக்கை நமது பண்டைத்தமிழரிடம் இருந்தது.

ஆனால் இன்று நமது தமிழர் பண்பாட்டு நடைமுறையில் இச் சொற்களின் பயன்பாடு புறந்தள்ளப்பட்டுவிட்டது. குறிப்பாக கூந்தல் நரையை மறைக்கவேண்டும் என்ற நினைப்பும் பரவலாக்கம் பெற்றுள்ளது. வயதை மறைப்பதறு நரைமயிரைக் கறுப்பாக்கும் நடைமுறை தோன்றிவிட்டது. பெரும்பாலும் ஆண்கள் மத்தியில் எழுபது வயதுடையவரும் இளமைத் தோற்றத்தை விரும்பி தலைமுடியைக் கருமையாக்கச் சாயம் பூசுகின்றனர். இளையவரோடு போட்டியாக இளமைக் கோலம் பூண்டு திரிகின்றனர். ஆண்களின் இந்த இளமை வெறி முதிய பெண்களிலும் தொற்றிக் கொண்டுள்ளது.

பெற்றோர் என்ற வளர்ச்சி நிலையில் பண்பாட்டுக் கோலம் பேணவேண்டியவர்கள் மதிமயங்கிச் செயற்படும் அவலநிலையே இன்று காணப்படுகிறது. இளமையைக் குறைகூறும் சாயம் பூசிய போலி இளமை வெறி ஒழிக்கப்படவேண்டும். பிறழ்வான நடத்தைக் கோலங்களுக்கு நரையை மறைக்கும் போக்கும் ஒரு காரணம். நரை, திரை, மூப்பு இயற்கையின் கட்டமைப்பு. அதை செயற்கையால் மாற்றிவிடலாம் என்ற நினைப்புடன் செயற்படும் முதியோர் மனங்கள் செம்மை பெறவேண்டும். பண்பாட்டுச் சீரழிவுக்கு இத்தகைய பொய்மையான தோற்றமும் ஒரு காரணம். நரை வயது முதிர்ச்சியையும் வாழ்வியல் செயற்பாட்டையும் வழிநடத்தும். இடையே இளமை நரையை என்ன செய்வது? என்ற குரலும் கேட்கிறது. அது ஒரு தற்காலிக நோய். சமனற்ற உணவாலும் செயற்பாட்டாலும் வருவது. அதைவிட்டு வால்நரைக் கூந்தலோடு பண்பாட்டைப் பேணுவதே இயல்பான வாழ்வாகும்.



# Sri Lankan English

**Mrs. M. Uthayakumar**
*Teacher*

English is a global language. The label "English" can be applied to many forms of the language which are different from each other: American English, British English, Indian English, Sri Lankan English Australian English etc. In the South Asian sub continent English is widely spoken and written in India, Pakistan, Bangaladesh and Sri Lanka, Passe (1995) clearly acknowledges the claims of one of these varieties namely Lankan English; as a distinct viable and admissible mode of communication. When having observed that there grew up in Ceylon a form of English with a distinct form of its own in regard to pronunciation and in the case of most people idiom, grammar and vocabulary as well, He goes on to claim that some of the "translated idioms" that characterizes this form of English is not only "defensible and acceptable" but also essential for effective communication.

Lankan English arose as a result of the British rule established in the Island in 1976. Although Lankan English has infact emerged out of an interaction between the original "Standard" model and the native languages it has developed over the generations into an independent and viable native linguistic organism which has its own distinctive and highly systematic format, The variety of English in Sri Lanka deviates from S.B.E. But we can't consider it inferior. According to de Souza, speakers of English in Sri Lanka is a genuine speech community who have developed their own way of speaking in Sri Lanka.

Linguistically Sri Lanka is less complex with just two major indigenous languages Sinhala and Tamil. The third language largely in use in the Island is English, Thiru Kandaih classifies Lankan English as a distinctive mode of communication. There are two varieties of English in Sri Lanka.

1. Standard English spoken with local accent.
2. Non-Standard English spoken with local accent.

These varieties are adequate to fulfill the local needs and the first variety has succeded in maintaining effective communication internationally. The educated people mostly speak the first variety where as the less educated ones mostly in rural areas speak the second variety. This is usually influenced by the mother tongue of Sinhala or Tamil.

We can see the variation of Lankan English in its Phonological, morphological, semantics and lexical aspects.

- Substitution of pure vowels for English diphthongs. Eg :go.
- Failure to distinguish between lVl and lWl in initial position. Eg : wine
- Substitution of plosives for fricatives.
  Eg : Paddy field, think

More over Sri Lanka speakers are not used to aspiration, for example in standard British English pit, lpl is aspirated. But aspiration as it does not occur in Tamil.



The following English sounds are either new or troublesome to the speakers of Tamil.

lbl, ldl, lgl, ljl, lfl, lvl, lql, lsl, lzl, lfl is a major problem for Tamil speakers. Tamil speakers have difficulty in observing the contrast in English, as in pan, ban, fan. This is the tendency of the learners to substitute lpl for English lbl, lfl.
Eg : bank, boy, form, photo.
Tamil speaker usually replace the English lZl initially by lsl. ***Eg : Zoo.***

More-ever many new words have been coined to describe the local context.
***Eg : Funeral house, Wedding house.***

There are some words unique to Sri Lankan English. *Eg : Lak (one hundred thousand) pass out (graduate from university)*

In Lankan English we can find both English and the native element, Most of these are fused together to give newness. Inspite of the English long history in Sri Lanka, 21st century Sri Lankan academics debate about the legitimacy of a Sri Lankan English as separate dialect.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனிக்கட்டி ஆறுகளின் செயற்பாடுகள்
# Processes of Glaciers

திருமதி. சுபாகினி உதயராசா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்.

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

மழைப்பனியானது கட்டம் கட்டமாகவே பனிக்கட்டி ஆகிறது. புதிதாக விழுகின்ற பனிச்செதில்கள் (Snow flakes) மிக இலேசானவை. அவை மிக மென்மையான பளிங்குரு (rystalline) கட்டமைப்பைக் கொண்டவை. புதிதாக பெய்து உருவான ஒரு மழைப்படையின் அடர்த்தி மிகக் குறைவாகவே இருக்கும். இப்பளிங்குருக்களின் வெளி ஓருங்கள் ஓரளவிற்கு உருகுவதால் அவை ஒழுங்கற்ற, ஆனால் பெரும்பாலும் உருண்டை வடிவமான பருக்கைகளாக மாறுகின்றன. அல்லது தொடர்ந்து பெய்யும் மழைப்பனி காரணமாக கீழ்ப்படை அழுத்தப்பட்டு கீழேயுள்ள பளிங்குருக்களை ஒன்று சேர்ப்பதால் அவற்றின் ஆரம்பக் கட்டமைப்பு சிதைக்கப்பட்டு விடுகிறது. இவையெல்லாம் கீழ்ப்படையின் அடர்த்தியை அதிகரிக்க வைத்து, அதில் உள்ள இடைவெளிகளை நிரப்பி அதனுள் நீர் புகும் தன்மையையும் குறைக்கின்றன. அவ்வப்போது பனி உருகும் பகுதிகளில் இலேசாக இருக்கும் பனி ஓரிரு நாட்களுக்கு உள்ளேயே இறுகி அடர்த்தியான மணியுருவான பனியாக மாற்றப்படுகிறது.

ஆனால் இந்த முதற்கட்டத்திலேயே பனிக்கட்டி ஆறு ஒன்று உருவாகிவிடும் என்று சொல்லிவிடமுடியாது. பனிமணி என்று சொல்லப்படுகின்ற அந்த மணியுருவான கட்டுக்கோப்பினுள் வரும் பனியானது மேலும் அழுத்தத்தினால் மறுபடியும் பளிங்குருவாக்கப்படுகிறது. இச்செயற்பாட்டிற்கு கூடிய காலம் தேவைப்படுகிறது. தட்ப நிலை கூடிய இடைவெப்ப வலயங்களிலும் பார்க்க குளிர்கூடிய துருவப் பகுதிகளில் இதற்குக் கூடிய காலம் எடுக்கிறது. காரணம் இடைவெப்ப பகுதிகளில் பனி உருகும் இடங்களில் ஊடுருவும் உருகுநீர் எஞ்சியிருக்கும் இடைவெளிகளையும் நிரப்பி அங்கு மறுபடியும் குளிர்வடைவதால் பனித்திணிவின் பார் அதிகரிக்கிறது. இந்த விதாகப் பனிமணியாக இருந்து பனிக்கட்டியாக மாறுவதற்கு சுமார் (50) ஐம்பது வருடங்கள் வரை எடுக்கும் எனப் பனிக்கட்டி ஆற்றியலாளர்கள் (Glaciologists) கணிப்பிட்டுள்ளார்கள். இச் செயற்பாட்டிற்கு துருவப் பகுதிகளில் இன்னும் (10) பத்து வருடங்கள் அதிகமாகவும் எடுக்கலாம். எனவே இடைவெப்ப வலயத்தில் உள்ள பனித்திணிவுகள் (Snow packs) ஆற்றுப் பனிக்கட்டியாக மாறுவதற்கு அவை கனம் குறைந்தவையாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

அலாஸ்காவின் கரையோரப் பகுதியில் உள்ள ஒரு பனிக்கட்டி ஆறு உருவாகுவதற்கு 15 மீற்றர் வரை ஆழமான ஒரு பனிமணிப்படலம் தேவைப்படலாம். ஆனால் இதற்கு எதிர்மாறாக குளிர்கூடிய வரண்ட அந்தாட்டிக்காவில் அதே அடர்த்தியுள்ள பனிக்கட்டியை உருவாக்குவதற்கு 100மீற்றர் வரை தடிப்பான பனிமணிப்படலம் தேவைப்படுகிறது. இத்தகைய தரவுகள் பாரிய பனித்தகடுகளின் வயதை நிர்ணயிப்பதற்கு உதவுகின்றன. அந்தாட்டிக்காவில் பனித்தேக்கம் மிக மெதுவாகவே நடைபெறுகிறது. ஆனால் இங்குள்ள பனிமணிப்படலம் மிகவும் ஆழம் கூடியது. எனவே தற்போதைய பரிமாணங்களை இக்கண்டப் பனிக்கட்டி ஆறுகள் அடைவதற்கு நீண்ட காலம் எடுத்திருக்கும் என்பது உண்மையாகும்.

### பனிக்கட்டி நகர்வும், தின்னலும்
### Glaical Movement and erosion

பனிக்கட்டியின் நகர்வு மிக உயர்ந்த மலைப் பாங்கான வலயங்களில் கூட மிக மெதுவாகவே நடைபெறுகிறது என்பது உண்மையானாலும் அதன் தின்னல் வலுமிக்க சக்தி வாய்ந்ததாகும். மலைப்பனிக் கட்டி ஆறுகள் உருகித் தமது பள்ளத்தாக்குகளை விட்டு வெளியேறிய பின்னர் அங்கு உலகிலேயே மிகவும் இரகசியத்தக்க இயற்கைக் காட்சிகளைக் காணக்கூடியதாக இருக்கிறது. பள்ளத்தாக்குகளின் ஓரங்கள் செங்குத்தாகவும் குத்துச் சரிவுகள் போலவும் காட்சியளிக்கின்றன. நீழ்வீழ்ச்சிகள் நூற்றுக்கணக்கான மீற்றர் உயரத்தில் இருந்து நெடுங்குத்தாகத் தட்டையான, பரந்த பள்ளத்தாக்குகளின் ஆழமான பகுதிகளுக்குள் விழுகின்றன. பனிக்கட்டி ஆற்றுக் காலத்திற்கு முன் வளைந்தோடிய ஆறுகளால் வட்டமாக்கப்பட்ட முழுச் சுவடுகள், பனிக்கட்டி நீண்டு பள்ளத்தாக்கின் பாதையை மென்மையாக்கியபடியால் கூரிய சக்தியொன்றால் பிளக்கப்பட்டவை போல் காட்சியளிக்கின்றன. பனிக் கட்டித் துணுக்குகளினால் இயற்கையாத் தோன்றிய அணைகளுக்குப் பின்னால் ஏரிகள் உருவாகின்றன. தரைத்தோற்றத்திற்கு மேலாக பல கோணங்களிலுமான சிகரங்களும் எழுந்து நிற்கின்றன. மொத்தத்தில் பனிக்கட்டி ஆறுகள் மறைந்து விட்டாலும் அவை செதுக்கி வைத்துள்ள கண்கவர் காட்சிகள் நிலைத்து நிற்கின்றன.

### வெப்பமும், பனிக்கட்டியாற்றுத் தின்னலும்
### Temperature and Glaical erosion

சாதாரண ஆற்றுத் தின்னல் குறித்து பெருமளவு விபரங்கள் அறியப்பட்டுள்ளன. பனிக்கட்டி ஆறுகளோடு ஒப்பிடுகையில் ஆற்று நீரோட்டம், அடையற் சுமை, அதன் பண்பு மற்றும் பள்ளத்தாக்கின் புவிவெளியுருபவியல் போன்ற பல்வேறு பண்புகளையும் அளப்பது சுலபமாகும். ஆனால் பனிக்கட்டிக்கும் தின்னல் நடைபெறும் அதன் கீழ்ப்பகுதிகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளையும் பனிக்கட்டி ஆறுகளின் பல்வேறு பகுதிகளுக்கும் இடையே நடைபெறும் நகர்வையும் எளிதில் அளவிட்டுவிடமுடியாது. ஆற்றுத் தின்னல் குறித்து நாம் ஆராய்ந்தபோது ஆற்று வேகத்தையோ அல்லது அதன் தின்னல் வலிமையோடு தொடர்புபட்ட மட்டில் வெப்பம் ஒரு காரணியாக குறிப்பிடப்படவே இல்லை. ஆனால் பனிக்கட்டி ஆற்றுத் தின்னலுடன் தொடர்புபட்ட வகையில் வெப்பம் ஒரு மிக முக்கிய காரணியாக அமைகிறது. ஒரு பனிக்கட்டி ஆறு தனது பள்ளத்தாக்கை அரிக்கும் வலிமையை நிர்ணயிப்பதில் அந்த பனிக்கட்டியாற்றின் அடிப்பகுதியில் உள்ள வெப்பமும், உருகுநிலை வெப்பமும் மிக முக்கியமான காரணிகளாக அமைகின்றன.

பனிக்கட்டி ஆற்றிலுள்ள வெப்பநிலை அதன் ஆழத்திற்கு ஏற்றவாறு குறைவடைவதில்லை. பனிக்கட்டி ஆற்றின் பனிக்கட்டிப் படையின் பாரத்தின் அழுத்தம் மற்றும் அடித்தளப் பாறைகளின் வெப்பநிலை ஆகியவை உட்பட பல்வேறு காரணிகள் பனிக்கட்டி ஆற்றின் மிகக் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள பனிப்படையின் (அடித்தளப் பனிக்கட்டி) வெப்பநிலையைப் பாதிக்கின்றன. அடித்தளப் பனிக்கட்டி உருகக்கூடிய வெப்பநிலையை அடையும்போது பனிக்கட்டி குளிர்ந்த நிலையில் இருந்தபோது கொண்டு சென்றதிலும் பார்க்கக் கூடுதலான அடையற் சுமையைக் கொண்டு செல்கிறது. எனவே இடைவெப்ப வலயங்களிலுள்ள மலைப்பனிக்கட்டி ஆறுகள் அடித்தளப் பனிக்கட்டி கடுங்குளிராக உள்ள துருவப் பகுதி பனிக்கட்டி ஆறுகளிலும் பார்க்க வலிமையான தின்னலில் ஈடுபடுகின்றன. கிறீன்லாந்து, அந்தாட்டிக்கா போன்ற இடங்களிலுள்ள கண்டப் பனிக்கட்டியாறுகள் மிகப்பாரிய அளவு பிரமாணங்களில் காணப்பட்டாலும், அவற்றின் நகர்வு மிக மெதுவாகவே நடைபெறுகிறது. தாழ் அகலக் கோட்டுப் பகுதிகளில் உள்ள மலைப்பனிக்கட்டி ஆறுகளினதும் பார்க்க இத்துருவப் பகுதி பனிக்கட்டி ஆறுகளின் அளவோடு ஒப்பிடுகையில் அவற்றின் தின்னல் செயற்பாடுகள் வலிமை குறைந்தவையாகவே உள்ளன.

### மலைப்பனிக்கட்டி ஆற்றினுடைய அரித்தல் நிலருவுருங்கள்
### Degradational Landforms of Mountain Glaciers

மலைப்பிரதேசங்களிலே பனிக்கட்டி ஆற்றின் அரித்தல் செயன்முறையால் பல்வேறு வகையான நிலவுருவங்கள் உருவாகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு –

**1. ஏரிகள் - Lakes**

மலைப் பிரதேசங்களில் குறிப்பாக மலைச் சாய்வுகளில் உள்ள பள்ளங்களில் பனிக்கட்டிகள் படிகின்றன. இவை வெப்பத்தின் காரணமாக உருகுகின்றன. பின்னர் குளிர்வடையும்போது உறைகின்றன. இவ்வாறு உருகுதலும், உறைதலும் மாறி மாறி நடைபெறும். பள்ளமான பகுதிகளில் பனிக்கட்டி உருகி நீர் தேங்குவதனாலேயே ஏரிகள் உருவாகின்றன. மலைப்பனிக்கட்டி, ஆற்றினால் உருவாக்கப்படும் இவ் ஏரிகளைச் சிறப்பாக வட்டக்குகை ஏரிகள் (Cirques) என்றும் அழைக்கப்படுகின்றன. சிலவேளைகளில் இவ் ஏரிகள் பல கிலோமீற்றர் அகலத்தையும் 50 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட நீளத்தையும் கொண்டு கைவிரல்கள் போன்ற வடிவத்தையும் கொண்டிருக்கலாம். இத்தகைய ஏரிகளை கைவிரல் ஏரிகள் (Finger Lakes) என்று அழைக்கப்படுகின்றன (படம் 1) இத்தகைய ஏரிகளை மேற்கு நியூயோர்க் பிரதேசத்தில் காணலாம்.




FIGURE 45-9 A satellite view of western New York State's Finger Lakes region, long a famous center of tourism and winemaking. Note the parallel alignment of the elongated lakes and their relationship to the area's drainage patterns. Lake Ontario is at the top, and its southernmost indentation lies just to the north of metropolitan Rochester; the Syracuse urban area is located in the extreme upper right.

**2. பனிக்கட்டியாற்றுப் பள்ளத்தாக்குகள்**
**Glacial Valleys**

மலைப்பனிக்கட்டி ஆறுகள் ஓடிய இடங்களில் இத்தகைய பள்ளத்தாக்குகளை அவதானிக்கலாம். ஆரம்பத்தில் ஆற்றுப்பள்ளத்தாக்குப் (River valley) போலவே "V" வடிவில் இப்பள்ளத்தாக்கு காணப்படும். தின்னல் செயற்பாடுகள் அதிகரிக்க, அதிகரிக்க "V" வடிவம் "U" வடிவமாக மாறுகின்றது. "U" வடிவ மலைப்பனிக்கட்டியாற்று பள்ளத்தாக்குளை பனிக்கட்டி யாற்றுத் தாழிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

**3. தொங்கு பள்ளத்தாக்குகள்**
**Hanging Valleys**


பனிக்கட்டியாற்றினால் உருவாக்கப்பட்ட பிரதான பள்ளத்தாக்குடன் சேராத பள்ளத்தாக்குகளையே தொங்கு பள்ளத்தாக்குகள் என்று அழைக்கப்படுகின்றன. அதாவது பிரதான பள்ளத்தாக்கில் இது தொங்கிக் கொண்டிருப்பதைப் போல காட்சி அளிக்கும். இதனைத் தொங்கும் தாழிகள் என்றும் (படம்) (Hanging trought) அழைக்கப்படுகின்றன.



*(வளரும்)*

# கி.மு. 500 வருடங்களுக்கு முன்பே வளமாக வாழ்ந்த கிரேக்க மக்கள்!






இன்று இருந்த இடத்தில் இருந்து கொண்டு உலகை தரிசிக்கலாம். என்ன சந்தேகமோ கூகிளிடம் விசாரிக்கலாம். நடுச்சாமத்திலும் எந்த பெற்றோல் டேசனிலும் விசாரிக்காமல் நண்பர்கள் வீட்டுக்கு நெவியின் உதவியுடன் சென்று வரலாம். எவ்வளவு முன்னேற்றம் இந்த உலகம் கண்டுவிட்டது.

முன்பு எல்லாம் இது சாத்தியமா? முன்னவர்கள் என்னத்தைத்தான் செய்து கிழித்தார்கள் என்று ஒருவித மமதையும் எமக்கு ஏற்படுவது உண்டு. உண்மையில் மனித வாழ்வு ஒரு மரதன் ஓட்டமே. ஒருவர் எடுத்த முயற்சியை அவர் விட்ட இடத்தில் இருந்து தொடர்வது தான் இந்த மனித குலத்தின் மரதன் ஓட்டம். அண்மையில் துருக்கி நாட்டில் சில பகுதிகளைப் பார்க்கும் வாய்ப்புக்கிட்டியது. அங்கு உள்ள பழைய கிரேக்க நகரங்கள் அன்று வாழ்ந்த மக்களின் வளத்தையும் விவேகத்தையும் பறைசாற்றின.



இன்று நேற்று வாழ்ந்த மக்கள் அல்ல அவர்கள் கி.மு 500 வருடங்களுக்கு முன் செழிப்பாக வாழ்ந்த மக்களது சரித்திரம். அப்பப்பா என் நாகரீகம், என்ன நுட்பமான கட்டடக்கலை. ரோமர் காலத்து கட்டிடங்கள். ரோமா புரிக்கு அடுத்து பெரிய நகரமாக திகழ்ந்து இப்பியூஸ் (Ephesus) இந்த நகரத்தின் பெயர் Kingdom of Arzawa இதன் கருத்து City of the Mother Goddess ஆகும். இங்கு வாழ்ந்த மக்கள் தொகை 250,000. இவ்வளவு மக்களுக்கும் தேவை யான வசதிகள் ஒழுங்காக அமைக் கப்பட்டு இருந்துள்ளது.

இந்த நகரம் வணிகத்தில் பெயர் பெற்றது. எனவே அதனை அண்டி ஒரு துறைமுகமும் உள்ளது. இவ்வளவு மக்களுக்கும் கல்வியறிவு போதிக்க பெரிய நூலகம். அத்துடன் கலைநிகழ்ச்சிகள் விளையாட்டுக்கள் இவற்றுக்கான இன்று இருக்கம் அதிநவீன அரங்கங்களுக்கு மூலாதார



மாகத் திகழும் படிகள்மேலும் மேடை கீழுமாக இருக்கும் முறை கி.முன் 150 வருடங்களுக்கு முன்பு அங்கு நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. அந்த அரங்கில் பார்வையார்கள் 25,000 ஒரே நேரத்தில் இருந்து பார்க்கும் வண்ணம் மிகப்பெரிய அரங்கமாக அமைக்கப்பட்டு இருந்தது. அதனை இன்றும் காண முடிந்தது. அன்று வாழ்ந்த மனிதனை உழைப்பை ஒவ்வொரு கல்லிலும் காணமுடிந்தது.

யாழ்பாணத்தில் இருந்து 1980 களில் யேர்மனி வரும்போது அங்கு பல இடங்களில் (நகரங்களில்) வாளிக் கக்கூசே இருந்தது. சரி அங்கு என்ன யேர்மனி வந்து பயன் மாநிலத்தில் ஒரு தோட்டத்தில் முதல் முதல் எம்மை அமர்த்திய போது குனிந்து பார்த்தால் அதே வாளிதான் தெரிந்தது. இப்படி மலசலகூடம் வீட்டுக்குள் ஒழுங்கா வர எத்தனையாண்டுகள் கழிந்தன.

ஆனால் கி.மு.150 வருடங் களுக்கு முன்னமே மலசலம் களிக்க குழாய் முறையைப் பாவித்து அதனூடாக ஆறுபோல் நீர் பாயவிட்டு அமர்வதற்கு துவாரம் இட்ட மாபிள் கல்லை அமைத்து அட்டகாசமாக வாழ்ந்திருக் கிறார்கள் அன்று. இந்த கட்டிட அமைப்புக்கு சொந்தக்காரர் ரோமானியர்கள். வியாபாரம் செய் வதற்கு பெரிய சந்தை. மன்னரும் மந்தி ரிகளும் கூடிக்கதைக்க தனி அரங்கம். அத்துடன் அன்றும் அரசனுக்கும் மந்திரிகளுக்கும் என பிரத்தியேக சுரங்கப்பாதை. அதனூடாகச் சென்றால் சந்தோஷ அறைகள் (அழகு தமிழில் அந்தப்புரம்) இப்படி சகல வசதிகளுட னும் கி.மு ஒரு கிரேக்க நகரம் துருக்கி யில் இருந்துள்ளது. இன்னும் பல கட்டிடங்கள் உண்மைச் சரித்திரங்கள் அங்கு புதைந்து கிடக்கின்றன.

ஆனால் அங்கு வாழ்ந்த இனமக்கள் சந்ததியினர் (ரோமனியரே கிரேக்க தேசத்தவரே) எவரும் இல்லை. எனவே உண்மைச் சரித்திரங்கள் பெருமைகள் பாதிக்கு மேல் புதைந்த படியே உள்ளன. உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தில் அரச மரங்களுக்கு அடியில் அதிகமாக வயிரவர் திரி சூலம் இருக்கும். இதனையே இன்னும் 100 ஆண்டுகள் கடந்து அங்கு வாழ்த மக்கள் இல்லை என்றால் அந்த திரிசூலத்தை திரித்து தேங்காய் உரிக்கும் அலவாங்கு என்றும் சொல்லுவார்கள். மன்னிக்கவும் இப்பவும் சொல் ஆரம்பித்துவிட்டார் கள்) எந்த நாட்டிலும் அந்த இன மக்கள் இல்லை என்றால் சரித்திரம் மாற்றப்படும் அபாயமே அதிகரிக்கும். உல்லாச பயணிகளைக் கவருவதும், பணம் சேர்ப்பதும் மட்டுமே முக்கிய குறிக்கோளாகி, உண்மைகள் கூனிக் குறுகிப் போகின்றன. ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு அதனை ஏற்றுக் கொள்வதில் உலகிற்கு ஏன் இந்தத் தயக்கம்.


வாணி பூட் சிற்றி அன்ட் பான்சி Vani Food City & Fancy




பலசரக்குப் பொருட்கள்
ஆண், பெண் இருபால
ரிற்குரிய அழகுசாதனப்
பொருட்கள்,
குழந்தைகளிற்கான
பொருட்கள், பாடசாலை
உபகரணங்கள்,

போட்டோ கொப்பி,
சமையல் உபகரணங்கள்
விளையாட்டு உபகரணங்கள்

கடை இல. 5, 6
பலாலி வீதி, உரும்பிராய்.

Prop. : Mr. S.K. Sabesan, B.A. (Hons)
T.P. : 0774297551, 021 7200300


கேட்டால் ஒழிய யோசனை கூறாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்க் காவியங்களில் அவல நாயகர்கள்

திருமதி ஆ. செங்கதிர்ச்செல்வன்
ஆசிரியை,
யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி.

'ஒப்பற்ற குணங்களையுடைய ஒருவனைத் தலைவனாகக் கொண்டு, அவனுடைய நாடு, நகர், பிறப்பு, வளர்ப்பு, அவனுடைய செயற்கரிய செயல்கள் முதலியவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் பயப்பக் கூறுவது காவியம் எனப்படும் என்று கூறுகின்றார் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள். இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்ட காவியங்களில் உயர் நிலையில் உள்ள பண்பாளன் ஒருவன் தான் செய்த ஒரு தவறுக்காக அவலப்படுவதையும் நாம் காண முடிகின்றது. இத்தகைய அவல வீரர்கள் பலரைத் தமிழ்க்காவியங்கள் சித்திரிக்கின்றன.

சிலப்பதிகாரத்தின் நாயகன் கோவலனும் சீவகசிந்தாமணியில் வரும் சச்சந்தனும், இராமாயணத்தில் வரும் இலங்கை வேந்தன் இராவணனும் இத்தகைய அவல நாயகர்களாவார்.

'கண்ணினால் கண்டு போற்றுதற்குரிய செவ்வேள்' என்றும் 'கருணைமறவன்' என்றும், 'செல்லாச் செல்வன்' என்றும், 'இல்லோர் செம்மல்' என்றும் பலவாறாகப் போற்றப்படுகின்ற பண்புமிக்க கோவலன் தன் மனையாளை விடுத்து மாதவி என்னும் நாட்டியக் கணிகையுடன் வாழ்ந்து, தன் செல்வம் முழுவதையும் இழக்கின்றான். அதன் பின்னரே தன்னுயிர் மனையாள் கண்ணகியைப் பிரிந்து வாழும் தவறை உணர்ந்து வருந்துகின்றான்.

கவுந்தியடிகளை வணங்கி, தான் செய்த தவறினை மிகுந்த மனவருத்தத்தோடு கூறுகின்றான்.

ஆயர் சேரியில் மாதரி இல்லத்தில் கண்ணகி உணவு சமைத்து, கோவலனுக்குப் பரிமாறியபோது அவளை நோக்கி 'இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன் சிறுமுது குறைவிக் குச் சிறுமையும் செய் தேன்' என்று கூறி வருந்துகின்றான்.

இவ்வாறாக அற்புத நற்பண்புகள் பெற்று விளங்கிய கோவலன் காவியத்தில் பல இடங்களில் தான் செய்த தவறை நினைந்து வருந்துகின்றான். ஆயினும் அவனால் அழிவிலிருந்து தப்பமுடிந்ததா? இல்லையே...! அவனுடைய வரலாறு அவ லத்திலும் அவலமாக அல்லவா முடிகிறது...!!



சீவகசிந்தாமணியில் வரும் சச்சந்தன் ஏமாங்கத நாட்டு மன்னன் ஆவார். காவியத் தலைவன் ஒருவனிடம் காணப்படுகின்ற இரக்கசிந்தை, வள்ளன்மை, பகைவர்களை அழிக்கும் வீரம், கலைகளை விரும்பி இரசிக்கும் பண்பு, மன்மதனைப் போன்ற அழகு... என்று இன்னோரன்ன பண்பு களைக் கொண்டு விளங்கிய சச்சந்தன் தன் மனைவி மீது கொண்ட ஆராக் காதலால அரச கடமைகளை மறக்கின்றான். அரச பொறுப்பை, தன் முதலமைச்சனான கட்டியக்காரனிடம் ஒப்படைக் கின்றான். கட்டியக்காரன் மீது சச்சந்தன் அசையாத நம்பிக்கை தந்திருந்தான். ஆனால் கட்டியக்காரனோ அரசனைக் கொன்று ஆட்சிப் பொறுப்பைத்தானே அபகரிக்கத் திட்டம் தீட்டுகின்றான். இதை வாயிற் காவலன் மூலமாக அறிந்துகொண்ட அரசனுக்கு கட்டியக் காரனின் நயவஞ்சகத் தன்மை புரிகின்றது. அழிவின் வாயிலில் அகப்பட்டு நின்றபோது அவன் தன் தவறை உணர்கின்றான். அதனால் அவனால் அழிவிலிருந்து மீளமுடியவில்லை. இறுதியில் கட்டியக்காரனால் கொல்லப்படுகின்றான். இந்த அவல நாயகனின் முடிவு எம்மைக் கவலைகொள்ளச் செய்கின்றது.

மூவுலகையும் அடக்கியாண்ட இலங் கைப் பெரு வேந்தன் இராவணன் ஆவான். இவன் ஆண்மையிலும் வீரத்திலும் கலைப் புலமையிலும் அன்பிலும் கொடையிலும், தெய்வ பக்தியிலும் மிகச்சிறந்து விளங்கி னான். இவ்வாறு தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கி இலங்கையை இலங்கச் செய்த பெருமைக்குரிய இராவணன், இராமனின் மனைவி சீதையிடம் மனதைப் பறிகொடுத்து அவளைக் கவர்ந்து வந்து அசோக வனத்தில் சிறை வைத்திருந்தமை பெருந் தவறல்லவா? இவ்வாறு மாற்றான் மனைவியைக் கவர்ந்து வந்ததால் அவன் அடைந்தஅவலத்தை உரைக்க வார்த்தைகள் ஏது?

நாம் மேற்கண்ட அவல நாயகர்களுள் இராவணன் இறுதிவரை தனது தவறினை உணராததால் அழிவெய்து கின்றான். சச்சந் தன் அழிவு நெருங்கியபின் தன் தவறை உணர்ந்துங்கூட இறுதியில் அழிவெய்து கின்றான். கோவலன் அழிவு நெருங்கு வதற்கு முன் தன் தவறை உணர்ந்து பலமுறை வருந்தியும் கூட அவனால் அழிவிலிருந்து மீள முடியவில்லை.

ஆகவே வாழ்க்கையில் எத்தனை பண்புகள் நிறைந்தவர்களாக வாழ்ந்தாலும் ஒரு தவறு இழைத்தால் அழிவெய்துவது திண்ணம். அதனால் நாம் நம் வாழ்வில் எவ்வித தவறும் இழைக்காமல் நடந்துகொள்ள வேண்டும் என்பது தெளிவாகின்றது.

ஜேர்மனியிலுள்ள பிரபல வியாபார ஸ்தாபனத்தினர்
தாயகத்தில் மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகின்றார்கள்

S.K.Silks Paradise

கல்யாண கூறைச் சேலைகள் பட்டுச் சேலைகள்,
பட்டு வேட்டிகள், பஞ்சாபி, சுடிதார்கள் இன்னும்....
டோட்மூண்ட் நகரில் மாபெரும் ராஜ முத்திரை
காக்கராச்சோலி சீக்குயின்ஸ் சேலைகள், அனார்கலி பஞ்சாபி அனைத்தும் சிறப்பு விலையில்
T.P. 0231-9501648
Germany

Jasmin Silk House
புதிய டிசைன்களில் இமிரேஷன் நகைகள், புதிய டிசைன் காப்புகள் எம்மிடம் கிடைக்கும்.

Jasmin Silk House
Fester Str.50,
40882 Ratingen,
Germany.
T.P. 02102-844744
மலிவும், தரமும், ஒன்றாய்க் குலாவிடும்.
உரிமையாளர் :
T. மோகனதாஸ்


T.T.S Brothers
Asien Supermarkt
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent
இலங்கை, இந்திய மளிகைப்பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்திற்கும் நாடுங்கள்.
மங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்கநகைகள் நவீன டிசைன்களில் அழகுறத் தருபவர்கள்
TEL: 0231-819288 Fax: 0231-833431
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Gopara Gnanam
திருமணப் பெண்ணுக்குரிய கூறைச்சேலை
வாங்குவோர்க்கு மணமகனுக்குரிய
குருத்தா முற்றிலும் இலவசம்!

T.P. 0231-54 500 28
Mob : 0171 330 65 42
Rheinische Str.81
44137 Dormund
Germany.


Travel AIR
www.travelair.de
Tel : 0202 / 4936921,
Tel : 0201 / 24431 04-05
Luisen Str.46, 42103
Wuppertal
உரிமையாளர் :
திரு. பரம் ஜெயக்குமார்


E.S.T.M Jewellery & Schmuck
எமது தங்க நகை ஸ்தாபனம் ஆனி 3ம் திகதி
முதல் புதிய இடத்தில் மங்களகரமான ஆரம்பம்!
T.P. 0231-1899023
Mob : 0171 330 65 42
Rheinische Str.73
44137 Dormund
Germany.
உரிமையாளர் :
சின்னத்துரை தயாகரன்

முயற்சி மூச்சு உள்ளவரை இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANDRA ஆதரவில் கலை அரங்கம்



காரைநகர் யாழ். கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மாணவிகள் கோட்டக்கல்வி அலுவலக திறப்புவிழாவின்போது செம்பு நடன நிகழ்வை நிகழ்த்தி ஆளுநரை வரவேற்றனர். மேற்படி நிகழ்வில் பங்குபற்றிய மாணவிகளை படத்திற் காணலாம்.

## கலாபூஷணம் விருது



யாழ் மண்ணில் பிறந்து நாவலப்பிட்டியில் நகரில் தனது சேவையை பல்வேறு வழிகளிலும் நிலைநாட்டி கலாபூஷணம் விருதுபெற்ற மிருதங்க வாத்தியக் கலைஞர் பிள்ளைநாயகம் திருநாவுக்கரசு ஐயா அவர்கள் விருதினைப் பெற்றுக்கொள்ளும் காட்சியினைப் படத்திற் காணலாம்

## 2012 தீவக வலய பௌர்ணமிதின விழா



2012 தீவக வலய பௌர்ணமி தின விழா அண்மையில் வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. விழாவில் தஷாவதார இசை நாடகத்தை ஆற்றுகை செய்த காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மாணவர்களையும் பொறுப்பாசிரியர்களையும் படத்திற் காணலாம்.

## நாவலப்பிட்டி பர்வதா நர்த்தனாலய ஆண்டுவிழா









நாவலப்பிட்டி பர்வதா நர்த்தனாலயம் அண்மையில் அதன் ஆண்டுவிழாவை சிறப்பாக நடாத்தியது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டி இந்தியத்தூதுவர் திரு ஏ. நடராஜன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில் நடன ஆசிரியர் திருமதி சிவாந்தி இராமமூர்த்தி அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதை முதலாவது படத்திலும். நர்த்தனாலய மாணவிகளின் நடன நிகழ்வுகளை ஏனைய படங்களிலும் காணலாம்




திருமண அழைப்பிதழ்களின் சாம்ராட்சியம்

The First Vendor of Choice in Jaffna

ANDRA WEDDING CARDS

#179/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)

Tel : 0212228929, 0217200000 Mob : 0776622981, 0777481696.

கலை உலகை அலங்கரிக்கிறது உள்ளத்தை அழகுபடுத்துகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by ANDRA DIGITAL IMAGE 021 222 8929

பத்திரிகை உலகின் "புதிய வடிவம்" வெற்றிமணி